# உதயன்

விலை ரூபா 6.00

டர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 20 வியாழக்கிழமை (01-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:66




# சொல்ஹெய்ம் நேற்று சந்திரிகாவுடன் பேச்சு!



## இன்று காலையில் ரணிலைச் சந்திப்பார்

கொழும்பு,பெப்ரவரி1

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் நடுநிலையாளராகச் செயற்படும் நோர் வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற் றுப் பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்தார். நேற்று மாலையே அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவைச் சந்தித்துப் பேசினார்.**

**இன்று காலை 10 மணிக்கு எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்கவை அவர் சந்தித்துப் பேசுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று மாலை கொழும்பில் ஜனா திபதி இல்லத்தில் ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்கவைச் சந்தித்த சொல்ஹெய்ம் ஒருமணி நேரம் அவ ருடன் விரிவாக உரையாடினார்.

எனினும் இருவரும் பேசிக் கொண்ட விடயங்கள் குறித்துத் தக

(12ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றுக் கைதான யாழ்.இந்து மாணவன் இன்று விடுதலை?

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.இந்துக் கல்லூரியின் 12 ம் ஆண்டு வகுப்பு மாணவனான ராசா சஞ்சீவன் நேற்று மாலை னியளவில் கொட்டடிப் பகுதியில் ளள அவரது வீட்டில் வைத்து ஆவது படையணி இராணுவத்தி ல் கைது செய்யப்பட்டார்.அவரது தொடர்பான ரசீது அவரது தயாருக்கு வழங்கப்பட்டது.

இந்த மாணவன் இன்று மனித ரிமைகள் ஆணைக்குழுப் பிரதி நிகள் முன்னிலையில் விடுவிக் பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப் வார் என்ற தகவல் நேற்று நள்ளி அவரது தந்தையாருக்குத் தெரி கப்பட்டதாக அறியவந்தது. (உ)

## சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.1

கேரதீவு கடல்நீரேரிப் பகுதியில் க்குதல் நடத்திய சமயம் உயி ந்ததாகத் தெரிவித்து இரண்டு ளைஞர்களின் சடலங்களை வரணி ராணுவத்தினர் நேற்று மாலை ழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

மேற்படி இரு சடலங்களும் கட் டக்காற்சட்டையுடனும்,கறுப்பு நிற னியனுடனும் காணப்பட்டன.

(உ-7-6)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.1

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் ன்று 400 பயணிகளுடன் வடபகு யில் இருந்து திருகோணமலை க்கிப் புறப்படும் என அறிவிக்கப் டுள்ளது.

இரண்டாவது பயணிகள் கப்பல் வைக்கென நேற்றைய தினம் பய ச்சீட்டுப் பெற்றவர்களை இன்று லை 7 மணிக்கு பயண ஏற்பாடு டன் ஸ்ரான்லி வீதியில் உள்ள ரியம் கட்டடத்துக்கு வருமாறு கப்பட்டுள்ளது. (உ-7)

## ஒக்ஸ்பாம் அலுவலகம் மீது கொழும்பில் கிரனேட் வீச்சு!

கொழும்பு,பெப்.1

கொழும்பில் உள்ள பிரிட்டன் நாட்டு அரசசார்பற்ற நிறுவனமான 'ஒக்ஸ்பாம்' அமைப்பின் அலுவலகம் மீது நேற்று அதிகாலை 12.30 மணி யளவில் கிரனேட் குண்டுத் தாக்கு தல் நடத்தப்பட்டது.

கொழும்பு - பாங்சால் வீதியில் உள்ள இந்த அலுவலகத்தின் மீது மோட்டார் சயிக்கிளில் வந்த இனம் தெரியாத இரு நபர்கள் இரண்டு கைக்குண்டுகளை வீசிவிட்டுத் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் எவருக் கும் காயம் ஏற்படவில்லையாயினும் பல கார்களும், அலுவலக ஜன்னல்க ளும் பலத்த சேதமடைந்தன.

(உ-6)

## 2 தமிழக மீனவர் சுட்டுக் கொலை!

சென்னை,பெப்.1

கோடிக்கரையை அண்டிய கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை யினர் நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் பலியானதாகவும், மூன்று மீனவர்கள் காயமடைந்ததாகவும் இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாகப பட்டினம் மாவட்டம் கீச்சன் குப்பம் பகுதி யைச் சேர்ந்த வடமலை, ஜெயந்தன் ஆகிய இருவரும் உயிரிழந்ததாக வும், அதே இடத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் படுகாயமடைந்த தாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## புலிகளைத் தடை செய்யக்கூடாது எனக்கோரி பிரிட்டிஷ் அரசுக்கு 1 லட்சம் பேரின் ஒப்பம்

### கிழக்கு பல்கலையில் இயக்கம் ஆரம்பம்

மட்டக்களப்பு,பெப்.1

விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டிஷ் அரசு தடைசெய்யக் கூடாது எனக் கோரி கிழக்குப் பல்கலைக் கழகச் சமூகம் ஒரு லட்சம் பேரின் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் இயக்கம் ஒன்றை இன்று ஆரம்பிக் கின்றது.

இதனையொட்டி இன்று காலை பல்கலைக்கழக மைதானத்தில் அடை யாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாகவும் -

உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதியில் கையெழுத்துப் போராட் டம் ஆரம்பித்து வைக்கப்படும் என வும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இவ்வாறு சேக ரிக்கப்படும் கையெழுத்துப் பிரதிகள் பிரிட்டிஷ் அரசுக்கும், இலங்கை அர சாங்கத்துக்கும் அனுப்பி வைக்கப் படும் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(உ-7-6-2

## குஜராத் பூகம்பப் பாதிப்பு யாழ். இந்து சமயப் பேரவை ஒரு லட்சம் ரூபா நிதியுதவி!

யாழ்ப்பாணம்,பெப்,1

குஜராத்தில் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் யாழ்.இந்து சமயப் பேர வையினரால் அடையாள அன்பளிப் பாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட வுள்ளது.

இந்த நிதியைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரிடம் கைய ளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமயப் பேரவை, இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய்க்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

குஜராத்தில் நிலநடுக்கம் கார ணமாக ஏற்பட்ட அழிவுகள் குறித்து இலங்கையில் வாழும் இந்துக்கள் சார்பில் இந்துசமயப் பேரவையின ராகிய நாம் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் பொதுமக்கள் மீளக் குடியமர்வது சாத்தியமல்ல!

### நேரில் பார்த்த கூட்டணியினர் கருத்து

யாழ்ப்பாணம்,பெப்.1

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள 90 வீதமான வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதால் அந்தப் பகு தியில் பொதுமக்களை உடனடியா கக் குடியமர்த்துவது என்பது சாத்தி யமான விடயமல்ல.

இவ்வாறு தென்மராட்சிப் பகு திக்கு நேற்றுச் சென்று வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக் குழுவினர் தெரிவித்தனர்.

சாவகச்சேரியில் பொதுமக்களை மீண்டும் குடியமர்த்துவதற்கான நட வடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பொது மக்கள் மீளக் குடியமரக் கூடிய சாத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ...ரு அமைச்சர்கள், ஐ.தே.கவின் எம்.பிக்கள் மூவர் சகிதம் ...ன்னி சென்று பிரபாவைச் சந்திக்க அனுமதி கோருகின்றார் மகேஸ்வரன்

யாழ்ப்பாணம்,பெப்.1

அரச தரப்பின் இரு அமைச்சர் ள்,ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று பிக்கள் சகிதம் வன்னிக்குச் சென்று லைவர் பிரபாகரனை அல்லது அவ து பிரதிநிதிகளைச் சந்திக்க அனு தி தரும்படி கோரி வே.பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ் வரன்.

"திரு.வே.பிரபாகரன், தமிழீழத் தேசியத் தலைவர், தலைமைச் செய லகம்,தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், வன்னி" என்று விலாச மிடப்பட்ட இக்கடிதத்தை அவரிடம் ஒப்படைக்கும்படி கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதியைக் கோரியி ருக்கிறார் மகேஸ்வரன்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க விவாதம் தேவையில்லை மகேஸ்வரனுக்கு சிவஞானம் பதில்

யாழ்ப்பாணம்,பெப்.1

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தில் ஊழல்கள் நடப் பதாகக் குறிப்பிட்டு அது குறித்துப் பகிரங்க விவாதம் நடத்த வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப் பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் தி.மகேஸ்வரன் விடுத்த அழைப் புத் தொடர்பாக கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

நேற்றைய உதயனில் இது தொடர் பாக வெளியான விவரங்களுக்குப் பதில் தரும் வகையில் அந்த அறிக்கை அமைந்திருந்தது.

இது விடயத்தில் பகிரங்க விவா தம் தேவையற்றது என்ற சாரப்பட அந்த அறிக்கையில் சிவஞானம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு பிள்ளைகளின் தாய் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவம்: இளம் குடும்பஸ்தர் கைதானார்

தென்மராட்சி,பெப்.1

கரவெட்டி நாவலர்மடம் அகதி முகாமில் தங்கியிருந்த ஆறு பிள் ளைகளின் தாய் ஒருவர் கடந்த ஞாயிறன்று கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம் பவம் தொடர்பாக மேற்படி முகாமில் வசித்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மாலை நெல்லியடிப் பொலீ ஸாரால் கைது செய்யப்பட்டார்.

21 வயதுடைய இந்நபர் அண் மையிலேயே திருமணமானவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

மேற்படி சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் எனக் கருதப்படும் - சம்பந்தப்பட்ட அகதி முகாமில் வசித்து வந்த மற்றிருவரை நெல்லி யடிப் பொலீஸார் தேடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-7-117)

## யாழ்.இந்து மகளிர் வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இம் மாதம் 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய செயற்குழு தெரிவும் இடம்பெறவுள்ளதால் பெற்றோர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க-10)


**B.A. FINAL** (யாழ்.பல்கலைக்கழகம்)

விரிவுரைகள் ஆரம்பம்- 03.02.2001 8மணி.

**B.A. PART I**

விரிவுரைகள் கல்வியியற்கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் 03-02-2001 8 மணிக்கும்

ஏனைய மாணவர்களுக்குரிய விரிவுரைகள் 18-02-2001 9 மணிக்கும் ஆரம்பமாகின்றன.

**G.A.Q. யாழ். பேராதனை**

விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் பதிவு செய்து தரப்படும்.

விவரங்களுக்கு:- S.அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி. (83587)


## நான்காம் ஆண்டு நினைவலைகள்



### சீவரட்ணம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)

மண்ணக மலர்வு 31.08.1964 — விண்ணக வாழ்வு 16.01.1997

திதி:01.02.2001

தரணியிலே தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்டிய எம் அன்புத் தெய்வமே! இல்லத்தின் ஒளி மறைந்து நான்கு ஆண்டுகள் போனதையா! உள்ளத்தில் இருள் இன்னும் மறையாது போனதேன்? நான்காண்டுகள் அழுதும் ஓயவில்லை கண்ணீர். பிரிவுத்துயரும் ஆறவில்லை. மாறாத மாண்புடன் சீராக வாழ்ந்தீர்களே அப்பா! மாயமாய் வந்த காலன் ஜாலமாய் அழைத்ததேன்? துணைவிழந்த மனைவியும் ஆராத்துயரில் பிள்ளைகளும் பலம் இழந்த சகோதர சகோதரிகளும் என்றும் உங்கள் நினைவுடன் வாழ்கின்றோம். அன்பின் அப்பா உங்கள் வழிகாட்டலின்படி நாங்கள் நற்பிரசைகளாக வாழ்வோம் என்று கூறி உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்போம்.

'குற்றாலம்'
77/58 இராமநாதன் வீதி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(83593)

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட முதலாம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். (க-10)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

காரைநகர்,பெப்.1

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

காரைநகரைச் சேர்ந்த சிற்பாசாரியார் நடராஜா சிவபாலன் குழுவினரினால் 15 இலட்சம் ரூபா செலவில் இந்த புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலய மகோற்சவம் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தேர்த்திருவிழா தைப்பூசத் தினமான எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமையும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (க-73)

## பனை,தென்னை வள கூட்டுறவுச் சங்க கிளைக் குழுத் தேர்தல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள இரண்டு பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கிளைக்குழுத் தேர்தல்களை இந்த மாத முற்பகுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான தேர்தல் நாளை மறுதினம் சனிக்கிழமையும் தெல்லிப்பழை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுத் தேர்தல் எதிர்வரும் 10ஆம் திகதியும் இடம்பெறும். (க-17)


**வாடகைக்கு**

இல.51, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட 'கௌரிகா கடைக் கட்டடம்' உடன் வாடகைக்கு விடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-
187/34, ஆஸ்பத்திரி வீதி,
யூனியன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் சந்திக்கலாம்) (83595)

**ராஜா**
யாழ்ப்பாணம்
மாதவன், ஷாலினி
மற்றும் பலர் நடிப்பில்
**அலைபாயுதே**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)
03.02.2001 தொடக்கம்
வல்லரசு
(C/15088)

**லஷ்மி** இணுவில்
கடைசி வாரமாக
விஜயகாந்த்,மீனா நடிக்க
**வானத்தைப் போல**
(தீவிஸ்)
இன்னிசையில் இனிய பாடல்கள் நிறைந்தது.
(காட்சிகள்: 10.00, 2.30 (புதிய நேரம்)
(83606)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
**டைட்டானிக்**
(தமிழ் - டீல்ஸ்)
காட்சிகள்:10.30, 2.30 (புதிய நேரம்)
03-02-2001 முதல்
பெண்ணின் மனதைத் தொட்டு
(83600)

**யாழ் பல்கலைக்கழக கலைவட்டம்**
வழங்கும்
**முதுசம்**
நிகழ்வுத்தொடர் - 2
கொக்குவில் கலாபுவனம் வழங்கும்
**சாபவிமோசனம்**
(நாட்டிய நாடகம்)
தயாரிப்பு:- திருமதி. சாந்தினி சிவனேசன்
காலம்:- 03.02.2001 சனி மாலை 3.00 மணி
இடம்:- கைலாசபதி கலையரங்கு
நீங்களும் நாடகம் காண அழைக்கப்படுகிறீர்கள்.
-நுழைவுச்சீட்டு வாயிலில்

நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துவோர்:-
அல்பா மிக்சர்
பதிவு இல. 771
ALPHA MIXTURE
பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### சந்திரசேகரம் கனகசபை

(ஓய்வு பெற்ற புகையிரத இயக்குநர்)

அத்தியடி, பருத்தித்துறையைச் சேர்ந்த சந்திரசேகரம் கனகசபை நேற்றுமுன்தினம் (30.01.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், முருகானந்தன் (கனடா), சிவானந்தன், காலஞ்சென்ற விவேகானந்தன், திருமதி யோ.இந்துமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மு. பிரியதர்ஷினி (கனடா), இ.யோகராஜா (தொழில்நுட்பவியலாளர், சவுதி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரணி, துர்க்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.01.2001) புதன்கிழமை காலை 9 மணி (பழைய நேரம்) க்கு நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகராஜா இந்துமதி
(மகள்)

பருத்தித்துறை. (C/15087)

### திருமதி சாமுவேல் பிலோமினம்மா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாமுவேல் பிலோமினம்மா நேற்று (31.01.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரையின் (ஓய்வுபெற்ற இராணுவ வீரர்)அன்புச் சகோதரரும், தருமரட்ணம், நாகேஸ்வரி(மரிசிலின்), இராஜரட்ணம்(ரட்ணம் தொலைதொடர்புச் சேவை, மாகியப்பிட்டி) காலஞ்சென்ற இராயேஸ்வரி மற்றும் செல்வரட்ணம்(ஜேர்மனி), நாகரட்ணம் (யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பகுதி) காலஞ்சென்ற ஜீவரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் மரியபுஸ்பதேவி, அருள்பிரகாசம்(யாழ்.பல்கலைக்கழக நூலகம்), கனகாம்பிகை, நந்தினிகுமாரி(ஜேர்மனி), விஜயமோகனா ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மவசீகரன், தர்மராஜீ, சர்மிலா(பண்டத்தரிப்பு உயர்தர மகளிர் கல்லூரி), அருள்வதனன்(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய்), தர்சினி, அஜிதரன்(யாழ்.பரியோவான் கல்லூரி), ஜெரோம் (உடுவில் மகளிர் கல்லூரி), டிப்திகா(ஜேர்மனி), ரம்ஜா(உடுவில் மகளிர் கல்லூரி), நிதர்ஷன்(யாழ்.பரியோவான் கல்லூரி), விஜர்ஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2001) வியாழக்கிழமை பிப 2.30 மணியளவில் புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஆராதனை நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(83597)

தகவல்:-
- குடும்பத்தினர்.

### திருமதி அற்புதமலர் ஆறுமுகம்

பண்ணாகம் பண்டிதர் அ.ஆறுமுகம் அவர்களின் அன்புத் துணைவியார் அற்புதமலர் அவர்கள் 31.01.2001 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னம்மாவின் மூத்த மகளும் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை - செல்லம்மாவின் மூத்த மருமகளும், விவேகானந்தன்(நோர்வே), சிவானந்தன் (லண்டன்), முருகானந்தன் (நோர்வே) வசந்தமலர்(திருமலை), மங்கையர்க்கரசி (நோர்வே), திலகவதி (திருமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலராணி(லண்டன்), மகாராணி (லண்டன்), துரைலிங்கம்(கட்டடத்திணைக்களம், திருமலை), குணலட்சுமி (நோர்வே), கணபதிப்பிள்ளை(நோர்வே), செந்தில்நடராசா (கட்டடத் திணைக்களம், திருமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் எதிர்மன்னசிங்கம்(மலேசியா), இராசேஸ்வரி (அவுஸ்திரேலியா), கிருஷ்ணமூர்த்தி (கொழும்பு), இராசமலர் (ஓய்வுபெற்ற நேசவு ஆசிரியை, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசம்மா (சிங்கப்பூர்), பொன்னம்மா (சிங்கப்பூர்), இராமசாமி, மனோன்மணி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதர்சன், திருமதி சுகன்யா சடாட்சரம், இராகுலன், சோபிகா, கிரிசான், ஆதிபன், பார்த்தீபன், அருள்லிங்கம், தாரணி, துவாலிங்கம், சுகந்தலிங்கம், ரோசிகா, சுபந்தன், கபிலன், ஜனனி, கம்சவாகினி, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்:-
பண்டிதர் அ.ஆறுமுகம்
(கணவர்)

பண்ணாகம்,
சுழிபுரம்.

(83601)

# உதயன்

## மக்கள் தேவை நிறைவேறியது

பதினாறு வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் இயங்கத் தொடங்கி உள்ளது. நேற்று முன்தினம் மேல் நீதிமன்றம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பல ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நீதிவான் நீதிமன்றங்களும், மாவட்ட நீதிமன்றங்களும் மக்கள் மீளக் குடியமர்ந்த சுமார் ஒரு வருடத்தின் பின்னரே இயங்கத் தொடங்கின. அவ்வேளையிலேயே மேல் நீதிமன்றமும் நிறுவப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் தனக்குள் வைத்திருந்த காரணங்களினால் அது நடைபெறவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற போர்வையின் கீழ் குடாநாட்டு இளைஞர்கள், நங்கைகள் சந்தேகப் பேர்வழிகளாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட காலத்தில்—

குடாநாட்டில் மேல் நீதிமன்றம் ஒன்று அவசரமாகவும் அவசியமாகவும் நிறுவப்பட வேண்டிய தேவை மிகப் பெரியதாக உணரப்பட்டது.

அவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞர்கள், நங்கைகள் அனுராதபுரம், கொழும்பு, வவுனியா நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டு அங்கேயே தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளும் அந்த நீதிமன்றங்களிலேயே நடைபெற்றன.

அதன் காரணமாக குடாநாட்டுப் பெற்றோர்கள் பலரும் அனுபவித்த கஷ்டங்களும் அலைச்சல்களும் எண்ணற்றவை. வசதி குறைந்த பெற்றோர்கள் கடன்பட்டு வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டி இருந்தது. பயண அனுமதி பெறுவது தொடக்கம் தங்குமிட வசதி தேடுவது வரை அவர்கள் பட்ட சிரமங்களும் அலைச்சல்களும் பல வகை. மொழிப் பிரச்சினை காரணமாக சட்டத்தரணிகளை அமர்த்தவும் கஷ்டமுற நேர்ந்தது, அனுராதபுரத்தில்.

நீதித்துறை சார்ந்தவர்களும் மனித உரிமைகள் மற்றும் தொண்டர் அமைப்புகளும் பல தடவைகள் மேல் நீதிமன்றத்தின் அவசியத்தை வலியுறுத்தியதன் பேரில் யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றம் அமைக்க அரசு மிகத் தாமதித்தே முடிவு செய்தது — முன் வந்தது.

அது இயங்குவதற்குரிய இடத்தைப் பெறுவதில் சிறிது காலம் கழிந்து, இப்போது கைகூடியிருக்கிறது. இதனால் பொது மக்கள் இதுவரை அனுபவித்த பல வேண்டாத சிரமங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கைதிகள் கால வரையறை இல்லாது காவலில் இருக்க வேண்டிய நிலை நீங்கும். அது மட்டுமன்றி, மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. பி. எஸ். வரதராஜா தெரிவித்தது போன்று, யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு இந்த மண்ணின் நீதிமன்றிலேயே நீதி கிடைக்கும் வசதியும் கிடைத்துள்ளது.

பிரதம நீதியரசரின் மேற்கண்ட விருப்பம் நிறைவேற எல்லோரும் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நீதிபதி கேட்டுள்ளார். அதனை மக்களும் நீதித்துறை சார்ந்தவர்களும் வழங்குவதற்குப் பின்னிற்கமாட்டார்கள். நீண்டநாள் தேவை நிறைவேறியுள்ளதால் மக்கள் பெரும் திருப்தி அடைந்துள்ளனர். அவர்களது முயற்சி திருவினை தந்துள்ளது.

குடாநாட்டில் சமூகக் குற்றங்கள் பெருகிவருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு நீதிமன்றங்கள் உதவலாம். அவை வழங்கும் தண்டனைகள் ஓரளவிலேனும் அவற்றைக் குறைக்க உதவும்.

# தென்மராட்சிப் பகுதி மக்களை
# மீளக்குடியமர்த்த நடவடிக்கை

தென்மராட்சி, பெப். 1

இடம்பெயர்ந்த தென்மராட்சி மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் படைத்தரப்பின் பணிப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி பிரதேச செயலகம் மீளக்குடியமர விரும்பும் பொதுமக்களின் விவரங்களை கிராம சேவை அலுவலகர் பிரிவு ரீதியாகத் திரட்டி வருகிறது.

இதேவேளை, தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அப்பகுதியில் இயங்கிய அரச, உள்ளூராட்சி, கூட்டுறவு அலுவலகங்கள் மற்றும் வங்கிகளின் உயரதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு வரணி மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென 52 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி அறிவித்துள்ளார்.

இதனிடையில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக குடியிருப்பாளர்களின் விவரப் பட்டியலை எதிர்வரும் 5 ஆம் திகதி தம்மிடம் கையளிக்க வேண்டும் என்றும் 52 ஆவது படையணி அதிகாரி அறிவித்துள்ளார்.

மீளக்குடியமர விரும்பும் மக்கள் தமது குடும்ப அங்கத்தவர்களின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொழில் அடையாள அட்டை இலக்கம் ஆகிய விவரங்களை எழுதி உடனடியாக இணுவிலில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அல்லது நெல்லியடியில் இயங்கும் பிரதேச செயலக உப அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கிராம அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிந்திய ஒரு தகவலின்படி மீளக்குடியமர்த்துவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுவதை அடுத்து சில குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகத் தெரியவந்தது.

வரணி, இடைக்குறிச்சி, குடமியன், தாவளை, இயற்றாலை, உசன், கொடிகாமம், கைதடி, மட்டுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வாகனங்களில் பொருள்களை ஏற்றிக் கொண்டு தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்கின்றனர் என்று அறியவருகிறது. (க-117-31)

## கோப்பாய், பலாலி கலாசாலைகளில்
## ஆசிரிய பயிற்சி முடித்த 48 பேர் இன்று கப்பலில் செல்கின்றனர்

கோப்பாய், பலாலி ஆகிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியை நிறைவு செய்த –வெளி மாவட்டங்களைச் சேர்ந்த—48 ஆசிரியர்கள் இன்று வியாழக்கிழமை சிற்றி ஒவ்றிங்கோ கப்பலில் புறப்பட்டுச் செல்கின்றனர்.

போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மேலதிக மாகாண கல்விப் பணிமனையில் வரவை உறுதிப்படுத்தி தமது கையொப்பத்தை இட்டு வந்த 58 பேரில் 10 பேர் கடந்த வாரம் விமானம் மூலம் சென்றனர். மிகுதி 48 பேருமே இன்று கப்பலில் செல்கின்றனர். (க-10)

## யாழ்ப்பாணத்தில் சுதந்திரதினநிகழ்வு

யாழ்ப்பாணம், பெப. 1

இலங்கையின் 53 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கட்சியின் உப தலைவர் இ. சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளதாக இணைச் செயலாளர் க. தேவகுலநாயகம் தெரிவித்துள்ளார். (உ–10)

## பாடசாலை மாணவியருடன் சென்ற பஸ் குடைசாய்ந்தது
### தெய்வாதீனமாகப் பாதிப்பில்லை

யாழ்ப்பாணம், பெப். 1

பாடசாலை மாணவரை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று நிலத்தில் புதையுண்டு சாய்ந்தது எனினும் அதில் பயணம் செய்த சுமார் 150க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவிகள் தெய்வாதீனமாகக் காயம் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர் என்றாலும் மாணவிகளின் அவக்குரல் சிறிது நேரம் அவ்விடத்திலுள்ளவர்களை பதற்றமடைய வைத்தது.

யாழ்ப்பாணம் வேம்படி வீதியில், வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் நேற்றுக் காலை 8.20 மணிக்கு இச்சம்பவம் இடம்பபற்றது

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் மாணவிகளை ஏற்றி வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை பாடசாலைச் சேவை பஸ் வண்டியே அவ்விடத்தை அண்மித்தபோது எதிரே வந்த இராணுவத்தின் கனரக வாகனமொன்றிற்கு பாதை விட்டுக்கொடுப்பதற்காக வீதியை விட்டு விலகியது. அப்போது மழை பெய்து ஈரலிப்பாக இருந்த தரையில் புதையுண்டு சாய்ந்த பஸ் அருகில் இருந்த மதிலுடன் முட்டி நின்றது

பஸ்ஸுக்குள் இருந்த ஐந்தாம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரையான வகுப்பு மாணவிகள் பீதியுற்று அவலக்குரல் எழுப்பியவாறு சாய்ந்த பஸ்ஸில் இருந்து இறங்கிச் சென்றனர். சில மணி நேரத்தின் பின் பஸ் வண்டி அவ்விடத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டது. (உ..15)

## ஓர் இளைஞர் மட்டுமே தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமில் தற்பொழுது ஒரேயொருஇளைஞர்மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று நேற்று அங்கு சென்று வந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கோண்டாவில், ரயில்நிலையவீதியைச் சேர்ந்த இராஜமனோகர கிருபாகரன் (வயது 21) என்பவரே தடுத்து வைக்கப் பட்டுள்ளவராவார். (உ–10)

## மானிப்பாய்த் தபாலகத்திற்கு தெரிவான இடம் பொருத்தமில்லை
### பிரதித் தபால்மா அதிபர் அறிவிப்பு

வலி தென்மேற்கு, பெப். 1

மானிப்பாய்த் தபாற் கந்தோருக்கு தெரிவு செய்த இடம் பொருத்தமற்றது என்று வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் நாயகம் ஏ. கே. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்.

தற்போது மானிப்பாயில் இயங்கி வரும் தபாற்கந்தோருக்கு நிலையான கட்டடத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தக் கட்டடம் பொருத்தமற்றது என மானிப்பாய்ப் பிரதேச சபைத் தலைவர் லெலிச்சோர் அன்ரன் ஜோன்சனுக்கும், சமூக சுகாதாரச் சுற்றாடல் விவகார சபைச் செயலாளர் இ. வல்லிபுரத்துக்கும் கடிதம்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-185)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐவருக்கு அபராதம்

நெல்லியடி, பெப். 1

வடமராட்சிப் பகுதியில் உள்ள கற்கோவளத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐவரை, ஆயிரத்து 250 ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பொலிஸார் குறித்த ஐவரையும், கடந்த 25 ஆம் திகதி கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம், சந்தேக நபர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (க-109)

உதயவாக்கு

உலக வாழ்க்கையைச் சுவைக்கச் செய்வது அன்பு

## நாளை

தை 20

வெள்ளிக்கிழமை

திதி: நவமி

பின் இரவு 1.45 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை

பின் இரவு 4.56 வரை.

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 6. 36--8. 06

ராகுகாலம்: 11.06—12.36

(பகலுக்கும் இரவுக்கும்) பழைய நேரப்படி.

## சமய சந்நிதியில்

நீர்வேலி அருள்மிகு சாந்தி துர்க்கா ஆலய வருடாந்த மகோற்சவ விழா கடந்த ஜனவரி 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிறு காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு வட கோவை ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி கோயிலில் வேட்டைத் திருவிழா இடம் பெறும். (உ-72)

## இளைஞர் தாக்கப்பட்டதாக முறைப்பாடு

விசாரணைக்கென வீட்டில் இருந்து அழைத்துச்செல்லப்பட்டவர், அடித்தாக்குதலுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அச்சுவேலி தம்பாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிவராசா சிவஸ்ரீ (வயது27) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

இது தொடர்பாக அவரது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த திங்களன்று வீட்டில் இருந்து விசாரணைக்கென தனது மகனை அழைத்துச் சென்ற சீருடையினர் அச்சுவேலி சிவில் காரியாலயத்தில் வைத்து இரவிரவாக அவரை அடித்துத் தாக்கியதாகவும் —

அடியின் தாக்கத்தினால் மயக்கமடைந்தவர் விடிந்த பின் மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தபோது அங்கே யாரும் இல்லாதிருந்ததை அடுத்து அங்கிருந்து புறப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ15]

## நிதி ஒதுக்கீடு

வல்வெட்டித்துறை கம்பர்மலை ஸ்ரீஞானவைரவர் ஆலய புனர்நிர்மாண வேலைகளுக்கு இந்து சமய விவகார கலாசார அமைச்சு இரண்டரை லட்சம் ரூபாவை ஆலய நிர்வாகத்திற்கு வழங்கியுள்ளது.

ஆலய திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மூலஸ்தானம் மற்றும் ஆலய மண்டபம் என்பன கட்டப்பட்டுவருகின்றன.

இந்த ஆலயத்தின் திருமஞ்சனக் கிணறும் கட்டப்பட்டு வருகின்றது. இக் கிணறு அமரர் செல்லன் – நாகலிங்கன் ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினரால் ஒரு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. (ஐ-31)

## இம்முறை 'சம்பியன்'

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில நவாலி முருகானந்தா விளையாட்டுக்கழக அணியும் இளவாலை யங்கென்றீஸ் அணியும் தெரிவு செய்யப்பட்டன

இறுதியாட்டம் கட்டுடை ஞானவைரவர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நவாலி முருகானந்தா விளையாட்டுக் கழக அணி தொடர்ந்து 3 நேர் செற்றுக்களை வென்றதன் மூலம் சண்டிலிப்பாய் பிரதேச "சம்பியன்" ஆகியது.

சிறந்த விளையாட்டு வீரராக முருகானந்தா அணியைச் சேர்ந்த பொ கிருபானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க-100)

# கண்ணீர் அஞ்சலி

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்
**திரு. வை. இராசகிளி**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி வைரமுத்து அம்மாள்

அவர்கள் 28—01—2001 இல் காலமாகிவிட்டார். அவரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பணியாளர் நலன்புரிச் சங்கம்,
ஊழியர் தொழிற்சங்கம்,
கரவெட்டி ப. தெ. வ. அ. கூ. சங்கம்.

(83582)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 — 01 — 1937
மறைவு 12 — 02 — 2000

## அமரர் தம்பையா பரமசாமி

(முன்னாள் தபாலதிபர்)

திதி: 01 — 02 — 2001

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'


உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மருமக்கள்.**

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(83455)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் கதிரன் முருகன்

தோற்றம்: 04 - 06 - 1927
மறைவு: 13 - 02 - 2000

திதி:- 01 - 02 - 2001

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழ வைத்த அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவுகள் எம்மை விட்டு என்றும் பிரியாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவினால் துயருறும்;
- குடும்பத்தினர்

அறிவொளி வீதி,
புத்தூர் கிழக்கு.

(83525)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 1
கடந்தமாதம் 29 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:—

### சாவகச்சேரி

[164951ஏ]·

### கரவெட்டி

(135303ஏ], [151464ஏ],
[151464பி], [151464சி],
[151464டி], [151464ஈ],
[156137ஏ], [162255ஏ],
[164543ஏ] [154543பி[,
[164765ஏ], [164765பி],
[164765சி], [164765டி],
[164938ஜி], [164992ஏ],
[164992பி], [165417ஏ],
[165938ஏ], [195938 பி],
[165638சி], [165938டி],
[165938ஈ], [165938எப்],
[167229ஏ[, [167229பி],
[167229சி], [167452ஏ],
[167452பி], [169447ஏ],
[169490ஏ], [169490பி],
[169904ஏ], [172166ஏ],
[172323ஏ], [172325ஏ],
[172325பி], [172325சி],
[172325டி], [172325ஈ],
[174246ஏ], [174246பி],
[174438ஏ], [174564ஏ],
[174566பி], [174566சி],
[174570ஏ], [174570பி],
[174570சி], [174580பி],
[174675ஏ], [174675பி],
[174675சி], [174676ஏ],
[174707ஏ], [175580ஏ]
[176076ஏ], [176076பி],
[176120ஏ], [176126ஏ],
[176126பி], [176129ஏ],
[176134ஏ], [176134பி],
[176134சி], [176157ஏ],
[176208ஏ], [176208பி],
[176208சி], [176250ஏ],
[176252ஏ], [176252பி],
[176252சி], [176272சி],
[176293ஏ], [176333ஏ],
[176333பி], [176368ஏ],
[176370ஏ], [176370பி],
[176372ஏ], [176372பி],
[176419ஏ], [176419பி],
[176419சி], [176419டி],
[176433ஏ], [176433பி],
[176442ஏ], [176442பி],
[176479ஏ], [177517ஏ],
[177861ஏ], [180618ஏ],
[180619ஏ], [180622ஏ],
[180623ஏ].

### மருதங்கேணி

[174424ஏ], [174424பி],
[174424சி], [174424டி],
[174424ஈ], [174424எப்],
[174572ஏ], [174572பி],
[176119ஏ], [176136ஏ],
[176258ஏ], [176401ஏ],

### பருத்தித்துறை

[156139ஏ], [158433ஏ],
[164489ஏ], [164489பி],
[164489சி], [164490ஏ],
[164534ஏ], [164824ஏ],
[164824பி], [165239ஏ],
[168128ஏ], [172143ஏ],
[172187ஏ], [174621ஏ],
[174621பி], [174654ஏ],
[174654பி], [174669ஏ],
[176065ஏ], [176065பி],
[176065சி], [176128ஏ],
[176128பி], [176139ஏ],
[176174ஏ], [176174பி].
(176217ஏ), (176217பி),
(176228ஏ), (176456ஏ),
(1755 6ஏ), (176993ஏ),
(177521ஏ), (177521பி),
(177521சி), (177881ஏ),
(180616ஏ), (180616பி),
(180616சி), (181051ஏ),

கடந்த மாதம்30ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்ட இலக்கங்கள் வருமாறு:

### யாழ்ப்பாணம்

(154218ஏ), (154218பி,
(170104ஏ), (170201ஏ),
(170258ஏ), (175646ஏ),
(175646பி), (178017ஏ),
(178017பி), (178101ஏ),
(178101பி), (178101சி),
(178311ஏ), (178339ஏ),
(178339பி), (178484ஏ),
(179399பி), (179599ஏ),
(179855ஏ), (179855பி),
(179879ஏ), (179895ஏ),
(179895பி), (179895சி),
(179903ஏ), (179903பி),
(179903சி), (179903டி),
(179912ஏ), (173918ஏ),
(179918பி), (169918சி),
(179924ஏ), (179954ஏ),
(179954பி), (179954சி),
(179955ஏ), (179956ஏ),
(179960ஏ), (179997ஏ),
(179997பி), (180023ஏ),
(180067ஏ), (180072ஏ),
(180075ஏ), (180076ஏ),
(180094ஏ), (180094பி),
(180094சி), (180094டி),
(180094ஈ), (180094எப்),
(180094ஜி), (180101ஏ),
(180101பி), (180121ஏ),
(180169ஏ), (180192ஏ),
(180192பி), (180205ஏ),
(180255ஏ), (180259ஏ),
(180295ஏ), (179897ஏ),
(179897பி), (179897சி).

### கோப்பாய்

(172036ஏ), (172036பி),
(172036சி), (172036டி),
(178493ஏ), (178493பி),
(179916ஏ), (179916பி),
(179916சி), (179958ஏ),
(180031ஏ)

### நல்லூர்


(168858ஏ), (168858பி),
(168858சி), (168858டி),
(168858ஈ), (170014ஏ),
(175668ஏ), (178239ஏ),
(178421ஏ), (178434ஏ),
(178434பி), (178464ஏ),
(178468ஏ) (178468பி],
(178468சி), (178468டி),
(179856ஏ), (179952ஏ),
(179952பி), (179953ஏ),
(179953பி), (179953சி),
(179953டி), (179953ஈ),
(180009ஏ), (180009பி),
(180091ஏ), (180091பி),
(180107ஏ), (180107பி),
(180107சி), (180154ஏ),
(180154பி), (180267ஏ),
(180267பி). (ஐ-10)

## வாரந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை 'தெய்வத்துணை' எனும் விடயம் பற்றி வரணியூர் சைவப் புலவர் சி. கா. கமலநாதன் சொற்பொழிவாற்றுவார். அறிமுகவுரையை சிவஸ்ரீ இ. குமாரசாமிக்குருக்கள் நிகழ்த்துவார். (க)

# நீங்காத நினைவில்

8 ஆம் ஆண்டு — 6 ஆம் மாதம்





அமரர்
**S. மார்க்கண்டு**
(பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்)
மலர்வு 1945-12-19 உதிர்வு 1993-01-19

செல்வன்
**மார்க்கண்டு மதிசீலன்**
மலர்வு 1978-10-25 உதிர்வு 2000-09-06

பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
கண்ணின் மணிபோல் எமைக் காத்து கண்ணியமாக வாழ்ந்து - எம்
கடமைகள் முடிக்காமல் எமை ஆறாத்துயரில் மூழ்கவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் இரு தெய்வங்களின்
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (02—02—2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

தவசிகுளம்,
கொடிகாமம்.

(83499)

# பழுதடைந்த அரிசியே கையிருப்பில்: நிவாரண விநியோகத்தில் தாமதம்

மூளாய்,பெப்.1

மனித பாவனைக்கு உதவாத அரிசியே கையிருப்பில் உள்ளதால் ஜனவரி மாதத்திற்கான உலர் உணவு நிவாரண விநியோகம் வலி. மேற்கில் தாமதமடைந்து வருகின்றது.

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கையிருப்பில் நிவாரண விநியோகத்திற்காக உள்ள அரிசியில் கணிசமான பகுதி மனித பாவனைக்கு உதவாதவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த அதிகாரிகளும், வலி.தென்மேற்கு பிரதேச செயலக அதிகாரிகளும் கையிருப்பில் உள்ள அரிசியை பார்வையிட்டுள்ளனர். இதன்போது கணிசமான பகுதி அரிசி மனித பாவனைக்கு உதவாதவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இவ் விடயம் தொடர்பாக நீண்ட விவாதம் நடைபெற்றது. இதன் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கருத்துக்களை பிரதேசசெயலர் கேட்டு அறிந்து கொண்டார்.

இதைத் தொடர்ந்து உலர் உணவு நிவாரண விநியோகத்தின் போது மனிதபாவனைக்கு உதவாத அரிசியை எக்காரணம் கொண்டும் பொது மக்களுக்கு விநியோகிக்க வேண்டாம் என்று பிரதேச செயலர் உத்தரவிட்டார். அதாவது பொது மக்கள் தரும்படி கேட்டால் கூட இவ்வாறான அரிசியை விநியோகிக்க வேண்டாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-99)



கரவெட்டி இராஜகிராமத்திலுள்ள சிறுவர்கள் சுகவாழ்வு நிறுவனத்தினால் அண்மையில் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சாட்டி கடற்கரைக்கு கூட்டிச் செல்லும் வழியில் அவர்கள் யாழ்.பொது நூலகத்தைப் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம் இது. (ஐ-5)

## குடிசன மதிப்பீட்டுக்கான பூர்வாங்கப் பணி ஆரம்பம்

யாழ்மாவட்டத்திலும் இந்த ஆண்டு குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான தயாரிப்பு வேலைகளை யாழ்புள்ளிவிவரத் திணைக்களம் துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

எதிர்வரும் ஜூன் மாதம் நாடு முழுவதும் இக்குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளது. யாழ்மாவட்டத்திலும் இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் கடந்தவருட இறுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையில் சம்பந்தப்பட்டிருக்கின்ற அனைத்து அரச ஊழியர்களுக்கும், நிர்வாகசேவை அதிகாரிகளுக்கும் மேற்படி நடவடிக்கை தொடர்பாக விசேட பயிற்சிகள் வழங்குவதற்கும்ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மாதிரிக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அங்கு முன்னோடி நடவடிக்கையாக குடிசன மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அனைத்துப் பிரதேச செயலகங்களையும் மேற்படி நடவடிக்கைக்காக தயார் நிலையில் வைத்திருப்பதற்குர் முயற்சிக்கப்பட்டு வருகிறது. (ஐ-99)

## காரைநகருக்கு வருபவர்கள் 3 நாள்கள் தங்க அனுமதி

### கடற்படைத்தரப்பில் உறுதிமொழி

காரைநகர்ப் பகுதி மக்கள் பொன்னாலை ஊடாக காலை 6.30 மணி முதல் பயணம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வெளியூர்களில் இருந்து வருவோர் குறைந்தது மூன்று நாள்கள் காரைநகரில் தங்கிச் செல்வதற்கு அனுமதி (பாஸ்) வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் கடற்படையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர்ப் பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்யும் நோக்குடன் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போதே இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடபிராந்திய கடற்படைத்தளபதி, காரைநகர் கடற்படைத்தளபதி காரைநகர் கடற்படை பொதுசனத் தொடர்பு அதிகாரி மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள், காரைநகர் பிரஜைகள் குழு பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

காரைநகர் கசூரினா பீச்சுக்கு தினசரி காலை 10மணி தொடக்கம் மாலை 4மணி வரை பொது மக்கள் சென்றுவர அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் கடற்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.(க-73)

## திருட்டுச் சந்தேகநபர் இருவருக்குப் பிணை

வலி.வடக்கு,பெப்.1

பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இருவர், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த க.மனோகரன் மீது ஐந்து திருட்டுகள் தொடர்பாகவும் சண்டிலிப்பாய் மாசியப்பிட்டியைச் சேர்ந்த சி.சாந்தலிங்கம் மீது எட்டுத் திருட்டுகள் தொடர்பாகவும் நீதிமன்றில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (க-86)

## 'தேவரதம்' இடைநிறுத்தம்; தீவுப் பகுதி மக்கள் சிரமம்

காரைநகர்,பெப்.1

ஊர்காவற்றுறைக்கும், அனலைதீவு - நயினாதீவுக்கும் இடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த 'தேவரதம்' படகு பழுதடைந்துள்ளமையால் இச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசசபைக்குச் சொந்தமான இந்தப் படகு மாத்திரமே ஊர்காவற்றுறையில் இருந்து தினமும் காலையில் எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய தீவுப் பகுதிகளுக்கு அரச ஊழியர்களையும் பொதுமக்களையும் ஏற்றிச் செல்லும் பணியில் ஈடுபட்டு வந்தது.

தற்போது இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தனியாருக்குச் சொந்தமான படகுகள் காலையில் அனலைதீவு எழுவைதீவுப் பகுதிகளில் இருந்து ஊர்காவற்றுறைக்கு வந்து பிற்பகலே மீண்டும் பயணத்தைத் தொடர்கின்றன. இதனால் காலையில் தீவுப் பகுதிகளுக்கு எவரும் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (க-73)

## செஞ்சிலுவைக் கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.1

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இம்மாதம் நான்கு தடவைகள் திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதலாம் திகதி மற்றும் 8 ஆம், 15ஆம், 22ஆம் திகதிகளில் இச் சேவை இடம்பெறும். கடந்த காலங்களில் புதன்கிழமைகளில் நடைபெற்று வந்த இந்தச் சேவை கடந்த ஜனவரி மாதத் திலிருந்து வியாழக்கிழமைகளில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக் கது. (க-10)

## தும்பளையில் லூர்து மாதா உற்சவம்

வடமராட்சி,பெப்.1

கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான தும்பளை புனித லூர்து மாதா வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

உற்சவ நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் கூட்டுத்திருப்பலிப் பூசையுடன் வருடாந்த உற்சவம் நிறைவுறும். (க-173)

## வீட்டுத் திட்டம் இடைநடுவில்! பல்லசுட்டி மக்கள் அவதி!!

வலிகாமம் மேற்கு,பெப்.1

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பல்லசுட்டி, அராலி, சுழிபுரம் ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப் புத்திட்டம் இடைநடுவில் நின்று விட்டதால் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அவதிப்படுகின்றனர்.

"போரூட்" நிறுவனத்தினரால் பின்தங்கிய மக்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட இந்த வீடமைப்புத் திட்டம் பூர்த்தியடையாமல் அரைகுறையாகக் காட்சியளிக்கின்றது. இதனால் பின்தங்கிய குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வசதியான உறைவிடம் இன்றி தொடர்ந்து கஷ்டங்களை அனுவித்து வருகின்றனர்.

போரூட் நிறுவனத்தினரின் வீடமைப்புத் திட்டம் பூர்த்தியடைந்து குடியேறக் காத்திருந்த அவர்கள் தற்போது பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தினருடன் கலந்தாலோசிக்காமலேயே மேற்படி வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (க-175)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் 23 பேரே பரீட்சையில் சித்தி

### தோற்றியவர்கள் 107 பேர்

யாழ்ப்பாணம்,பெப்.1

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட மத்தியஸ்தர்களுக்கான 'தரம் சி' பரீட்சையில் சித்தியடைந்த 23 பேரின் பெயர்கள் வெளியாகியுள்ளன.

இப் பரீட்சைக்கென யாழ்.மாவட்டத்திலிருந்து 107 பேர் தோற்றியிருந்த போதும் 23 பேரே சித்தியடைந்துள்ளனர் என்று மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ. எப்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

சித்தியடைந்த 23 பேரின் பெயர்கள் வருமாறு:-

கமலா விநாசித்தம்பி, நிலயோகினி தர்மகுலசிங்கம், மதிவதனா சுந்தரலிங்கம், சுரேந்தினி சிதம்பரநாதன், ராதை அருளம்பலம் -

சிவசோதி நரேந்திரன், தேவா சின்னத்தம்பி, மைதிலி பூபாலசிங்கம், ஜசிந்தா நல்லையா, பாலகிருஷ்ணன் ஜெயகேசவன் -

சுபாசினி கந்தையா, நாகேந்திரராஜா ராஜமுகுந்தன், துரைராஜசிங்கம் வாகீஸ்வரன், தமிழரசி சரவணசிவா, ஜெயா சரவணபவஜுபர் -

சத்தியமதி இராஜதுரை, சந்திரமதி தவராஜா, காந்திமதி தவராஜா, ஜெராலின் வின்சுலோஸ், பேட்டி வனிஸ்ரர் மரியதாஸ், ஞானேஸ்வரி திருநாவுக்கரசு, உதயசுதர்சினி இராஜரட்ணம், கிருபாசக்தி சிவராஜா.

## நிவாரணப் பொருள்கள் விநியோகம்

தென்மராட்சி,பெப்.1

இடம்பெயர்ந்த மக்களுக்கான ஜனவரிமாத உலர்உணவுப்பொருட்கள் கொடிகாமம் ப.நோ.கூ. சங்கக் கிளைக் கடைகளில் கடந்த 30 ஆம் திகதிகு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேசமயம் சாவகச்சேரி, பளை ஆகிய ப.நோ.கூ.சங்கங்களின் கிளைக் கடைகளுக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (க-117)



வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் பாதீனியம் களை ஒழிப்பு வாரம் அண்மையில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன், குத்துவிளக்கு ஏற்றி பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சி.சின்னத்துரை, மருதனார்மடம் விவசாயக் கல்லூரி அதிபர் குகதாசன் மற்றும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அவர்கள் பாதீனியம் ஒழிப்புச் சிரமதானத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். *(படம் : வலி.தெற்கு செய்தியாளர்)*



சங்கானையை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட பாதீனியம் களைகளை அழிக்கும் பணியை அண்மையில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் ஆரம்பித்து வைத்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.தர்மராசா, கிராம உத்தியோகத்தர் க.ஜெகதீசன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம் : வலி.மேற்குச் செய்தியாளர்)*

## தென்மராட்சி பாடசாலைகளில் தளபாடங்கள் இல்லை

தென்மராட்சி,பெப்.1

தென்மராட்சி கிழக்கு பகுதியிலுள்ள பாடசாலைகளில் தளபாடங்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாடசாலைகள் தற்போது வடமராட்சி பகுதியில் இயங்கி வருவதால், அங்கு நிலவும் தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அங்குள்ள தளபாடங்களை மீட்டுவரச்சென்றபோதே அவை காணாமல் போன விடயம் தெரிய வந்தது. (க-117)

# பற்றைகளை அழித்து நுளம்பின் பெருக்கத்தைத் தடுக்கத் திட்டம்

## மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்ப்பாணம் கண்டிக்குளி பழைய பூங்கா வளவில் வளர்ந்துள்ள பற்றைகளை அழித்து நுளம்புப் பெருக்கத்தைத் கட்டுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கடந்த வாரம் நடைபெற்ற யாழ்.மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை மேயர் ந. ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

* இந்தப் பற்றைகளை அழிப்பது தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு ஏற்ற ஒழுங்கு களைச் செய்தல்.

* கடந்த மே மாதத்துக்குப் பின்னா யாழ்.மாநகரசபைப் பகுதிகளில் இருந்து தற்பொழுது மீளக் குடியமரும நிலையிலுள்ள கொழும்புத்துறை, அரியாலை, குருநகர், பாசையூர், ஈச்சமோட்டை, கண்டிக்குளி போன்ற இடங்களிலுள்ள பொதுக் கிணறுகளை இலவசமாகவும், தனியார் கிணறுகளை சலுகை அடிப்படையிலும் புனரமைப்புச் செய்தல்.

* தொழிலாளர்களை மேற்பார்வை செய்பவர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்றை நடத்துதல்.

* யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் சபையின் சிரேஷ்ட அதிகாரிகளை தென்னிலங்கைக்கு அழைத்துச்சென்று அங்குள்ள மாநகர சபைகளின் செயற்பாடுகளை அவதானிக்கச் செய்தல்.

* அண்மையில் புனரமைப்புச் செயயப்பட்ட யாழ்.வீரசிங்கம் மண்டப கட்டடத்தில் வீரசிங்கம் மண்டபம் என்ற பெயர் பொறிக்கப்படவில்லை. இப்பெயர் பொறிக்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையிடம் கடிதம் மூலம் கோருதல்.

*மாநகரசபை தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளதால் சீருடையின்றிக் கடமையாற்றும் தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

இத்தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (ஐ-5-6)

### இரு இளைஞர்கள் விடுதலை

யாழ்ப்பாணம்,பெப்.1

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இரு இளைஞர்களை சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய வழக்கிலிருந்து விடுவித்தார் யாழ்மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா.

அரியாலை மலர்மகள் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை ஜெகநாதன் மற்றும் வல்வெட்டி மாவடியைச் சேர்ந்த சுந்தரம் மோகன்ராஜ் ஆகிய இருவருமே கடந்த திங்களன்று யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலைசெய்யப்பட்டனர். (க-6-5)

### கொக்குவில் சந்தை புதிய இடத்தில் இயங்கும்

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் நீண்ட காலமாக இயங்கிவரும் சந்தை மிக விரைவில் கே.கே.எஸ். வீதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் உள்ள கட்டடத்தில் இயங்கவுள்ளது.

போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக வீதி ஓரமாக இயங்கி வரும் இச் சந்தையை வேறு இடத்துக்கு மாற்றுமாறு அப்பகுதி மக்கள் நல்லூர் பிரதேச சபையிடம் முறையிட்டு வந்தனர். அதைத் தொடர்ந்தே குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் உள்ள காணியில் புதிய கொட்டகைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வேலைகள் பூர்த்தி அடைந்ததும் இந்த மாதம் 7ஆம் திகதி தைப்பூசத்தன்று இந்தச் சந்தைத் திறப்பு விழா இடம்பெறும் என்று நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் தெரிவித்தார். (க-72)

## ரூபாவின் பெறுமதியை மிதக்கவிடும் முடிவு

# நாடாளுமன்றின் அனுமதியின்றி தீர்மானம் எடுத்தது சட்டவிரோதம்

கொழும்பு,பெப்.1

ரூபா நாணயத்தை மிதக்கவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ கிடையாது. நாடாளுமன்றத்தின் அனுமதி பெறவேண்டியது அவசியம் என்று ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அக்கட்சியின் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு இந்தக் கருத்தை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறாமல் இந்த விடயத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தது சட்டவிரோதமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

1977ஆம் ஆண்டில் இது விடயம் ஐ.தே.கட்சியால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட சமயம் அன்றைய நிதி அமைச்சரான றொனி டிமெல்லினால் நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணை கொண்டுவரப்பட்டிருந்தது என்பதனையும் அவர் சுட்டிக்காட்டினார். (உ-3-186)

### 6 ஊழியர்களுக்கு இடமாற்றம்

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றுகின்ற ஆறு பேருக்கு விரைவில் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான அறிவித்தலை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார். பாடசாலைகளில் சுகாதாரத் தொழிலாளி, தோட்டத்தொழிலாளி மற்றும் அலுவலகத் தொழிலாளிகளாகக் கடமை ஆற்றுகின்ற 6 பேருக்கே இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

இடமாற்றம் பெறவுள்ள ஊழியர்களும் அவர்கள் தற்பொழுது கடமையாற்றும் பாடசாலைகளும் வருமாறு:-

✡ சி.செபஸ்தியாம்பிள்ளை (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

✡ க.கணேசமூர்த்தி (கந்தளாய் அல்தாரிக் ம.வி)

✡ அ.செல்வநாயகம் (மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலை)

✡ மா.உதயகுமார் (சங்கானை சிவப்பிரகாச ம.வி)

✡ செ.முருகவேள் (வேலணை வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி)

✡ ஏ.எல்.எம்.மகாம் (மன்னார் அல்மினா ம.வி) (ஐ-10)

### பிரதிப் பொலிஸ்மா அதிபராக கீர்த்தி கஜநாயக்க

குற்றவியல் புலன் விசாரணைத் திணைக்களப் பணிப்பாளரும் முதுநிலை பொலிஸ் அத்தியட்சகருமான கீர்த்தி கஜநாயக்க கடந்த ஒக்டோபர் 25ஆம் திகதி முதல் பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

1971இல் ஓர் உப பொலிஸ் பரிசோதகராகச் சேவையில் இணைந்த இவர் 1984 இல் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகவும் 1990இல் பொலிஸ் அத்தியட்சகராகவும் 1995 இல் முதுநிலைப் பொலிஸ் அத்தியட்சகராகவும பதவி உயர்வுகளைப் பெற்றார்.

கடந்த இரண்டு வருடங்களாக சீ.ஐ.டியின் பணிப்பாளராகவும் பணியாற்றி வந்தார். அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் குற்றவியல் புலன் விசாரணை மற்றும் புலனாய்வு சேகரித்தல் மற்றும் வளங்களை முகாமைத்துவம் செய்தல் ஆகிய விடயங்களில் பலவிதப் பயிற்சிகளைப் பெற்றுள்ளார். (ஐ-20)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 1948 - 05 - 30



விண்ணில் 2001 - 01 - 02

திருமதி
**அருளானந்தம் சந்திரபூமலர்**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

அன்னாரின் மரணச்சடங்கின் போது நேரில் சமூகம் தந்தவர்களுக்கும் மற்றும் தந்தி, தொலைபேசி, தொலைநகல் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பத்திரிகை, துண்டுப்பிரசுரம், மலர்வளையம் மூலம் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (01.02.2001) வியாழக்கிழமை மு.ப 11.30 மணிக்கு உடுவில் புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

*இராமலிங்கம் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*

(83494)



# ஓராண்டு நினைவு அஞ்சலி

"மலையிலிருக்கும் பட்டணம் மறைந்திருக்க மாட்டாது"
நல்ல போராட்டத்தைப் போராடினேன்.
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.
இது முதல் எனக்காக ஜீவ கிரீடம் வைக்கப்பட்டுள்ளது,



**ஜோய் கவின்சன் பேணாட்**

(பரியோவான் கல்லூரி மாணவன்,
Lower School ATHLETIC CAPTAIN Middle School S.P)

**தாயின் மடியில்** 20-04-1983 **இயேசுவின் மடியில்** 01-02-2000

"ஜீவனானாலும் மரணமானாலும் கிறீஸ்து என் சரீரத்தினால் மகிமைப்படுவார்"

இவரின் ஞாபகார்த்த ஆராதனை
இன்று (01.02.2001) வியாழக்கிழமை
இலங்கை பெந்தக்கோஸ்தே சபை
**78/5,W.A.**சில்வா மாவத்தை, கொழும்பு-6 இல் நடைபெறும்.
உலகம் எனக்கு பாத்திரமாகக் காணப்படவில்லை. மீண்டும் சந்திப்போம் என்ற நினைவில் வாழும்

**அப்பா, அம்மா, சகோதரர்,**
**அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா,**
**சித்தப்பா, சித்தி, மாமா, குடும்பத்தினர்**
**மற்றும் உற்றார், உறவினர்,**
**நண்பர்கள்.**

*18, கச்சேரி*
*நல்லூர் றோட்.*

(83486)



**6 கோடி பனைவளத்தினைப் பயன்படுத்தி**
**05 லட்சம் பனைத் தொழில் வல்லுநர்களின் வாழ்வு**
**மேம்பாட்டுக்காக உழைத்து உலகப் புகழ்பெற்ற**
**காந்தியத் தொண்டர், பனைத் தொழில் நிபுணர்**
**அமரர் கே. சம்பந்தம் அவர்களின்**
**ஐந்தாவது ஆண்டு நினைவில் சங்கமிக்கும்**

# அஞ்சலிக் கூட்டம்



இடம்: **யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடம்**
காலம்: **இன்று (01.02.2001) வியாழக்கிழமை**
**காலை 11.00 மணி**

தலைமை: **திரு.கி.பூபாலசிங்கம் அவர்கள்**
*(தலைவர், வடமாகாண தெங்கு,பனம் பொ.கூ.ச.சமாசம்)*

**நிகழ்ச்சி நிரல்**

1. *திருவுருவப்படம் திரை நீக்கம்*
   **உயர்திரு. சோ.கோகுலதாசன்** *அவர்கள்*
   *(பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை.)*
2. *மலரஞ்சலி*
3. *தலைமையுரை*
4. *வரவேற்புரை*
5. *அமரர் கே. சம்பந்தம் பற்றிய சில மனப்பதிவுகள்*
   **உயர்திரு. வி.ஜி.தங்கவேல் ஜே.பி.** *அவர்கள்*
   *(விரிவாக்கல் அலுவலர் பனை அ.சபை)*
6. *அஞ்சலியுரைகள்*
7. *நினைவுப் பேருரை*
   **பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்** *அவர்கள்*
   *(விலங்கியல் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*
8. *நன்றியுரை*

உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்காக உழைத்த
உத்தமனின் புகழ் உரை கேட்க
அணி திரண்டு வாரீர் என
அன்புடன் அழைக்கின்றோம்

**பனை அபிவிருத்திச் சபையும்,**
**பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும்**
**கொத்தணிகளும் சமாசமும்.**

(C/15077)

# பாக்.தளபதியை ஏற்றிச்சென்ற ஹெலி மயிரிழையில் தப்பியது!

## கேகாலை மலைப்பிரதேசத்தில் சம்பவம்

கொழும்பு,பெப்.1

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் முஹறமட் யூசுப்கான் மற்றும் படை அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் காலை கண்டிக்குச் சென்ற இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் ஒன்று கேகாலைப்பகுதியில் பாரிய விபத்தொன்றில் சிக்கும் நிலை மயிரிழையில் தவிர்க்கப்பட்டதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கேகாலை மாவட்டம் அரநாயக்கப் பகுதியின் ஊரகந்த மலைத தொடர்களுக்குச் சமீபமாகவே இந்த ஆபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. விமானப் படையினருக்குச் சொந்தமான எம்.ஐ.17 ரக ஹெலிகொப்டர் மேஜர் ஜெனரல் யூசுப்கானையும் மற்றும் படை அதிகாரிகளையும் ஏற்றிக் கொண்டு அன்று காலை இரத்மலானை விமானப்படைத் தளத்திலிருந்து கண்டி நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

இவர்கள் சென்ற இந்த ஹெலிகொப்டர் ஊரகந்த மலைத்தொடரை சமீபித்துப் பறந்து கொண்டிருந்த போது திடீரென அப்பகுதியில் பனிப் புகாரும் முகிற்கூட்டமும் படர்ந்து பயணம் தொடர்வதைப் பெரிதும் தடை செய்யவே அப்பகுதியிலுள்ள ஆபத்தான மலைத் தொடர்களை உணர்ந்த ஹெலிகொப்டரின் விமானி உடனடியாகவே ஹெலிகொப்டரைத் திருப்பிக் கொண்டு மலைத்தொடர் பகுதியைத் தவிர்த்து வேறு திசை நோக்கிச் சென்றுள்ளார்.

மிக மோசமான காலநிலையால் பின்னர் அந்த ஹெலிகொப்டர் கேகாலை பொது விளையாட்டரங்குப்பகுதியில் அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டு நிலைமை சுமுக நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன் பின்னர் மேஜர் ஜெனரல் யூசுப்கானும் ஏனைய படை அதிகாரிகளும் அங்கிருந்து தரை வழியாக வாகனங்களில் கண்டிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அத்துடன் சிலமணி நேரங்களில் ஹெலிகொப்டரும் அங்கிருந்து புறப்பட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்து பின்னர் வேறு பாதையூடாக கண்டிக்குச் சென்று கண்டியில் இருந்த மேற்படி படை அதிகாரிகளைக் கொழும்பிற்குப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்தது.

முன்னாள் அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்த ஹெலிகொப்டரும் இந்த மலைப்பிரதேசத்திலேயே விபத்திற்குள்ளாகியது. (ஐ)



கொக்குவில் புனித சின்னப்பர் ஆலய முன் மண்டபத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேசசபைத் தலைவர் மணிபல்லவராஜன் (நிஷாந்தன்) நாடாவை வெட்டி மண்டபத்தைத் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம் இது. (ஐ)

# மாவை ஆதீனகர்த்தா தலைமையில் மலேசிய ஆலயக் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,பெப்.1

மலேஷியா தலைநகர் கோலாலம்பூரில் எதிர்வரும் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள பேராக், சிலிம்ரிவர் ஸ்ரீமகாலட்சுமி ஆலய கும்பாபிஷேக நிகழ்வை நடத்திவைப்பதற்காக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தா மகாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் மலேஷியா சென்றுள்ளார்.

மகாலெட்சுமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 50 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இராஜகோபுரத்துக்கும் இடம்பெறும் கும்பாபிஷேகத்தை இவர் தலைமை வகித்து நிறைவேற்றி வைப்பார்.

மலேஷியாவில் உள்ள இந்து சமய மக்களும், அமைப்புக்களும் விடுத்த கோரிக்கையை ஏற்றே அவர் அங்கு சென்றுள்ளார்.

இந்தக் கும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளன. (ஐ-3)

## மா, சீனி பங்கீட்டு அடிப்படையில்

தென்மராட்சி,பெப்.1

வெளிச்சந்தையில் பொருள்களின விலை அதிகரித்து வருவதை அடுத்து யாழ்.மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்கள் மா, சீனி ஆகியவற்றைப் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கத் தொடங்கியுள்ளன.

தனியார் வர்த்தக நிலையங்களுக்கு மா, சீனி போன்றவை சென்றடையாமல் தவிர்க்கவே பங்கீட்டு அடிப்படையில் அவற்றினை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-117)

# ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

கொழும்பு,பெப்.1

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களிடையே இருந்து தகுதியும் திறமையும் உள்ளவர்களை நிரந்தர ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்வதற்கு வடக்கு - கிழக்கு மாகாணக கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இது பற்றி கடந்தவாரம் திருகோணமலையில் நடைபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கூட்டத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தனால் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மணித்தியால அடிப்படையில் ஒப்பந்தக் கடமையிலீடுபடும் ஆங்கில ஆசிரியர்களிடையே ஜி.சீ.ஈ. (உயர் தர) பரீட்சையில் சித்தியடைந்து ஜி.சீ.ஈ. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி பெற்றவர்களை நிரந்தர ஆசிரியர் சேவையில் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு மாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனையடுத்து தற்போது ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களிடையே மேற்படி தகைமையுள்ளவர்களின் தகவல்களைத் திரட்டி மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கோரப்பட்டுள்ளனர். (ஐ)

## சங்கீத, நடன பயிற்சி நெறி

தென்மராட்சி,பெப்.1

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பெல்வூட் பயிற்சி நெறித் திட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகளுக்கான சங்கீத, நடன பயிற்சி நெறி விரைவில் இணுவில் கந்தசாமி கோயிலுக்கு அருகில் உள்ள கட்டடத்தில் ஆரம்பிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவராகவும், வடஇலங்கை சங்கீத சபையில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களில் தரம் 1இல் சித்தியடைந்தவராகவும், 16 வயதுக்கும் 22 வயதுக்கும் உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பயிற்சிக் காலம் இரண்டு வருடங்கள் என்று மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் ரீ.சிவதட்சணாமூர்த்தி அறிவித்துள்ளார். (க-117)

## 'தாயகம்' வெளியானது

சுன்னாகம்,பெப்.1

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'தாயகம்' மாத சஞ்சிகையின் 40ஆவது இதழ் பல்வேறு படைப்பாளிகளின் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் மற்றும் பிற அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. (க-27)

# நாட்டைப் பாதுகாப்பதற்கு ஒரு குழந்தை; பௌத்தத்தைக் காக்க மற்றொரு குழந்தை!

## வேண்டும் என்கிறார் பிரதமர் ரத்னசிறி

கொழும்பு,பெப்.1

நாட்டைப் பாதுகாப்பதற்கு ஒரு குழந்தையையும் பௌத்த சாசனத்தைப் பாதுகாக்க ஒரு குழந்தையையும் அனுப்புமாறு நான் கோரினால் அதற்கு எங்கே குழந்தைகள் என்று கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

ரத்னபுரி மாவட்டம் கொடக்கவெல என்ற இடத்திலுள்ள பௌத்த விகாரை ஒன்றில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசிய பிரதமர் தொடர்ந்து கூறியதாவது:-

பௌத்தர்கள் என்ற வகையில் நாம் இன்று இரு முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்குகிறோம். இதில் முதலாவது பிரச்சினை பௌத்த விகாரைகள் பொருளாதார நெருக்கடியினை எதிர்நோக்குவதாகும். இரண்டாவது பிரச்சினை பௌத்தர்களின் சனத்தொகை வளர்ச்சி குறைந்திருப்பது தொடர்பானதாகும்.

'சிறிய குடும்பம் பொன் போன்றது' என்ற தத்துவத்தை பௌத்தர்கள் உறுதியாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இதன் விளைவு பௌத்த சனத்தொகை வளர்ச்சி குன்றிவிட்டது.

ஆனால் ஏனைய மதத்தவர்கள் இந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பதில்லை. இந்த நிலையை பௌத்தர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். நான் இதனைக் கூறுவது ஏனைய இனத்தவர்களிடையே முரண்பாட்டைத் தோற்றுவிப்பதற்கு அல்ல; பௌத்தர்களுக்குப் புரியவைப்பதற்கே.

எமது பௌத்தர்களின் நிலை இவ்வாறு இருப்பதால் இன்று நாம் முகங்கொடுத்து வரும் யுத்தத்துக்கு ஒரு குழந்தையையும் பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு குழந்தையையும் அனுப்புமாறு கேட்டால் அதற்குக் குழந்தைகள் எங்கே என்று கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை நீடிக்கக்கூடாது - என்றார். (க)

## கோப்பாய்ப் பகுதியில்

# உருளைக்கிழங்கைக் கிளறி அபகரிக்கும் திருடர்கள்!

கோப்பாய்,பெப்.01

கோப்பாய்ப் பகுதியில் உள்ள தோட்டங்களில் இரவு வேளையில் திருடர்கள் உருளைக்கிழங்கைக் கிளறி எடுத்துச் செல்கின்றனர்.

உருளைக்கிழங்கின் விலை சந்தையில் கணிசமான அளவில் உயர்ந்து காணப்படுகிறது. இதனைச் சாதகமாகக் கொண்டு பூரண விளைச்சல் அடைய முன்னரே அதனைத் திருடர்கள் கையாடி வருகின்றனர். கோப்பாய் இராஜவீதியில் உள்ள எஸ்.வரதராஜன், சு.முத்துக்குமாரசாமி ஆகியோரது தோட்டங்களில் கடந்த இரு நாள்களில் உருளைக்கிழங்கு திருடப்பட்டுள்ளது. (க-72)

# சாயி சிந்தனை



இறை சிந்தனை ஏற்பட்டு, உலகப்பற்று நீங்கி, யாக்கை நிலையாமையை எப்பொழுது மனிதன் உணர ஆரம்பிக்கிறானோ அன்றுதான் அவன் பூரணமடைகிறான்.

ஐம்புல வேடரின் ஆசை வலைப்பட்டு அவர்தம் ஏற்கணைக்குத் தப்புவது மிகவும் அரிதான ஒன்று. உலக நிர்ப்பந்தத்துக்குள் அழுந்தி, அதில் அமிழ்ந்து உழலும் மாந்தர் அதிலிருந்தும் மீளுவது எப்படி? அதற்கு வழி தெரியுமா?

மனிதனே! சிந்தித்துப்பார்! நல்லதையே நினைத்து, நல்லதையே செய்து, நல்லவற்றையே மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி வாழத் தலைப்படு. அதன் பலாபலனை நீயே அனுபவிப்பாய். பிறர் மனம் புண்படும்படி பேசவோ, நடக்கவோ கூடாது.

நாம் எமக்கு என்ன வரவேண்டுமென்று விரும்புகிறோமோ அதையே மற்றவர்களுக்கும் எதிர்பார்க்க வேண்டும். செய்யவும் வேண்டும். அதுவே மனுநீதி. எனவே இன்று முதல் புதிய மனிதனாக வாழ முயன்று பார்! இறைவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.

ஆதாரம் - சனாதனதர்மம்

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 'குளோரோக்குயின்' உகந்ததா?

சுகாதாரத்திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாணம் மலேரியா பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு (Endemic Area) கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கிழமைக்கு இரு குளோரோக்குயின் குளிசை மலேரியா நோய் வராது தடுக்கக் கொடுக்கப்படுகின்றது.

மக்கள் மன்றம்

தடுப்பு மருந்து கொடுக்கும்போது கருதவேண்டியவற்றில் முதலாவதாக மலேரியா நோய்த்தாக்கம் வருவதற்கான நிகழ்தகவை நோக்கவேண்டும். உதாரணமாக ஒரு குடும்பத்தில் உள்ள ஏனைய அங்கத்தவர்களுக்கு மலேரியா நோய் வராத தன்மையில் அக்குடும்பத்தில் கருத்தரித்த தாய்க்கு மட்டும் மலேரியா வருவதற்கான நிகழ்தகவு குறைவு.

மேலும் மலேரியா நோய் வருவதற்கு மலேரியா பிரதேசத்தில் (Endemic Areas) சாதாரண மக்களில் மலேரியா நோய்க்கிருமிகள் (Plasmodium) குருதியில் உள்ள அளவு அறியப்படவேண்டும். (Parasitaemia Count) அத்தகைய அளவு மக்களிலோ, கர்ப்பிணித்தாய்மார்களிலோ அறியப்படவில்லை.

அவ்வாறு செய்த பின்னும் குருதியில் குறித்த அளவுக்குமேல் இருந்தால்தான் தடுப்பு மருந்து உபயோகிக்கலாம். மேலும் தடுப்பு முறைகளில் நுளம்பு கடிப்பதில் இருந்து பாதுகாத்தலே மிகவும் அவசியமானது. அதற்கு நுளம்பு பெருகும் இடங்களைத் துப்புரவு செய்யவேண்டும். நுளம்பு கடிப்பதைத் தடுக்க நுளம்பு வலை உபயோகிக்க வேண்டும். எனவே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு குளோரோக்குயின் கொடுப்பதைவிட நுளம்பு வலை கொடுத்தலே சாலச் சிறந்தது.

குளோரோக்குயினைக் கொடுக்கும்போதும் மலேரியா வருவதற்கான நிகழ்தகவு உண்டு. இங்கு குளோரோக்குயினுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய (Plasmodium) வகை நுளம்பு உண்டு. மேலும் குளோரோக்குயின் ஈரல், சிறுநீரகம், என்பு, இருதயம், மூளை, கண் ஆகிய அங்கங்களைப் பாதிக்கக்கூடியது. இது வளரும் சிசுவிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

**டாக்டர் சி.யமுனாநந்தா**
**(மாவட்ட வைத்திய அதிகாரி, சாவகச்சேரி.)**

குளோரோக்குயினால் ஏற்படும் இலாபத்தினையும் அதனால் ஏற்படும் தீமைகளையும் பார்க்கும் போது (Risk/Benifit) அதனை சுகதேகிகளான கர்ப்பவதிக்குக் கொடுத்தலைத் தவிர்த்தலே நன்றாகும் என்பது எனது முடிவு.

மேலும் கர்ப்பிணித் தாய்மார்கள் மாதாமாதம் சோதிக்கப்படுகின்றமையாலும் அவர்கள் நோய்வாய்ப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு அனுமதிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாலும் மலேரியா நோய் தற்செயலாக வரினும் கட்டுப்படுத்த முடியும். ★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

**25/1,** காரைக்காட்டு வீதி, வண்ணார்பண்ணை என்னும் முகவரியைச் சேர்ந்த யோகேஸ்வரன் சிவநந்தினி என்பவரது விசேட அடையாள அட்டை (090202505) 24.01.2001 அன்று யாழ். சத்திரத்துச்சந்தியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஐங்கரன் களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவும் **T.P.3354.** (83553)

லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த ஆறுமுகம் பாலசிங்கம் ஆகிய எனது தேசிய அ.அ. (இல.520423354**X**) ஆறுகால் மடத்திற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **16/2,** லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (83496)

கரவெட்டியைச் சேர்ந்த கோமதி சிவகுமார் ஆகிய எனது தேசிய அ.அட்டை (இல.767220650**V**), விசேட அ.அட்டை (இல.0909024184), பல்கலைக்கழக அ.அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திரு.சிவகுமார், முகாமையாளர், மக்கள் வங்கி, நெல்லியடி. (தொலைபேசி இல.3256) அல்லது திருமதி.சொ.சுபசீலன், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (83580)

## விற்பனைக்கு

லுமாலா ஆண்கள் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராசாவின் தோட்ட வீதி, சந்திக்கு அருகில், 284, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (83578)

## யாழ்ப்பாணமா? கொழும்பா?

யாழ் சேவையில் யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் நூல்கள்: 1.இலக்கியக் கட்டுரைகள், 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.நாடகம் எழுதுவது எப்படி? 4.யாழ்ப்பாணம். (83571)

## கசிப்பு குடிக்க பொருள்களை திருடிய நபர் சிக்கினார்

கசிப்புக்குடிப்பதற்காக பொருள்களைத் திருடிக் குறைந்த விலையில் விற்பனை செய்து வந்த நபர் ஒருவரை கிராம உத்தியோகத்தர் கைது செய்து மானிப்பாய் பொலீஸில் ஒப்படைத்தார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

சுழிபுரம் குடாக்கனைப் பகுதியிலுள்ள வீட்டில், சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த குறிப்பிட்ட நபர் வானொலிப் பெட்டி மற்றும் உடுபுடைவையைத் திருடிச்சென்று கசிப்பு குடிப்பதற்காக அவற்றை விற்றுள்ளார். சந்தேக நபர் 8 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வானொலிப் பெட்டியை 800 ரூபாவுக்கும் சுமார் 10ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளை 450 ரூபாவுக்கும் விற்றிருந்தார்.

இது குறித்து கிராமசேவகர் நா.குமரகுருநாதனுக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் முழுவதும் மீளப்பெறப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டன. சந்தேக நபர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## நினைவஞ்சலிக் கூட்டம்

பனைத்தொழில் ஆய்வு நிபுணர் அமரர் கே.சம்பந்தத்தின் ஐந்தாவது நினைவஞ்சலிக் கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் வட மாகாண தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் கி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். (க-173)

## பஸ்சேவையை மூளாய் வரை நீடிக்க கோரிக்கை

யாழ்ப்பாணத்திலிருந்து (782 இலக்கம்) சுழிபுரம் வரையான பஸ் சேவையை மூளாய் வரை சேவையில் ஈடுபடுத்துமாறு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வேண்டுகோள் விடப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதிநிதி இது குறித்து நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தார். (க-175)

# பகிரங்க விவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

✪ யாழ்.மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ.சங்கங்கள் எதன் மீதும், இச்சமாசம் எதுவித கட்டுப்பாடும் விதிக்கவில்லையென்பதையும், அப்படி விதிக்க அதிகாரம் இல்லையென்பதையும், அவற்றின் சுயமாக இயங்கும் தன்மைக்கு எவ்வித தடையுமில்லையென்பதையும் நாம் பல முறை பகிரங்க மாகவே கூறியிருக்கிறோம். அதைச் சகல சங்கங்களும் ஏற்றுக்கொண்டுமுள்ளன. எரிபொருள், மாவு கொள்வனவு தவிர்ந்த ரொக்க கொள்வனவுகளில் சுமார்75 வீதத்துக்கும் மேலான கொள்வனவுகளை இப்பொழுதும் தனியார் துறையிடமிருந்தே அனேகமான சங்கங்கள் கொள்வனவு செய்கின்றன. தாம், சமாசத்தால் கட்டுப்படுத்தப்படுவதாக எந்தச் சங்கமாவது எமக்கோ கூட்டுறவு திணைக்களத்துக்கோ புகார் செய்யவில்லை. மீண்டும் மீண்டும் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்துவது பொருத்தமற்றது.

✪ கொழும்பு கொள்வனவுகள் சமாசத்தின் கொள்வனவு முகவர்களால் சமாசத் தலைவர், இயக்குநர் சபை, வர்த்தகமுகாமையாளர் ஆகியோரது வழிநடத்தலில் மேற்கொள்ளப்படுகின்றது. பெறப்படவேண்டிய கழிவுகள பெறப்பட்டும், தேவைப்படும் போது கூறுவிலைகளும் கோரப்பட்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✪ 14-01-2001 தைப்பொங்கலுக்கு முன்பு 3.12.2000 ஆம் திகதி சமாசத்தை வந்தடைந்த பயறு, சர்க்கரை என்பன 18.12.2000 ஆம் திகதியில் சங்கங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு விட்டன. இவற்றைக் கொள்வனவு செய்த சங்கங்கள் பயறு ரூபா 75ஆகவும், சர்க்கரை ரூபா 45ஆகவும் விற்றன.

✪ கடந்த 27-06-2000 ஆம் திகதி அதிகாலை மூழ்கடிக்கப்பட்ட 'உகன' கப்பலில் சமாசத்துக்குக் கொண்டுவரப்பட்ட பொருள்களின் முழுவிவரங்களும் 24-06-2000ஆம் திகதி சுற்றறிக்கை மூலம் முன்கூட்டியே அங்கத்துவ சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டமை பற்றியும், 27-06-2000ஆம் திகதி அன்றே இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இழப்புகள் பற்றி 'மேக்கன்ரைல் ஷிப்பிங் கம்பனி லிமிட்டெட்' நிறுவனத்துக்கு கப்பலில் ஏற்றும் ஆவணங்கள் விவரங்களுடன் நஷ்டஈடு கோரி எழுதியமை பற்றியும் 24-06-2000 ஆம் திகதிய கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட அதே பொருள்களுக்கே 27.06.2000 ஆம் திகதிய கடித மூலம் நஷ்டஈடு கோரப்பட்டது என்பதையும், -

இதன் முழு விவரங்களும் 12.08.2000 ஆம் திகதி நடைபெற்ற சமாச பொதுச் சபைக் கூட்டத்திலும்,-

16.11.2000 ஆம் திகதி சகல ப.நோ.கூ.சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட பத்திரிகையாளர் சந்திப்பில் சகல ஆவணங்களுடனும் விவரங்கள் முன்வைக்கப்பட்டு தெளிவாக்கப்பட்டுள்ளன.

✪ மேலும் இந்த இழப்பீட்டை பெற்றுத் தருமாறு வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு-கிழக்கு தமிழர் விவகார அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ.கே.வி. குகேந்திரன் சகிதம் இச்சமாச இயக்குநர் சபை கடந்த 03.01.20001 ஆம் திகதி சந்தித்த போதும், 17.12.2000 ஆம் திகதி தாமாகவே இச் சமாசத்தின் இயக்குநர் சபைக் கூட்டம் நடைபெறும் போது விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ அ.விநாயகமூர்த்தி அவர்களிடமும், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கு பற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ மாவை. சேனாதிராசா அவர்களிடமும், இந்த இழப்புக்களை, நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தர உதவுமாறு இச்சமாசம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், அதிஉத்தம ஜனாதிபதிக்கும் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

✪ நுகர்ச்சிப் பொருள்களைக் கொழும்பிலிருந்து கொண்டு வருவதில் யாழ்குடாநாட்டில் தனியார் துறை தவிர்ந்த ஒரேயொரு நிறுவனமாக இச்சமாசம் விளங்கி வருகிறது. இதைப் பலவீனப்படுத்தி உடைத்து விட்டு தனியார் துறையைச் சார்ந்த சிலர் தீவிரமாகச் செயற்படுவதை கூட்டுறவுத் துறையினராகிய நாம் நன்றாக அறிவோம். கூட்டுறவுத் துறையில் பொருள்கள் உள்ள போது விலைகள் ஓரளவு நியாயமாக இருப்பதும், சங்கங்களில் பொருள்கள் இல்லாத போது சந்தையில் விலைகள் அதிகரிப்பதையும் சாதாரண பொதுமக்களும் அறிவர்.

✪ எனவே எமது செயற்பாட்டு நடவடிக்கை விவரங்களை பத்திரிகை வாயிலாக பகிரங்கப்படுத்தி எம்மை நாமே பலவீனப்படுத்த மாட்டோம். எமது போட்டியாளர்கள் தாம் நினைத்தபடி செயற்படுவது மட்டுமன்றி அவர்களது செயற்பாடு எதுவும் பகிரங்கப்படுத்தப்படாத நிலையில் எம்மை மட்டும் விவரங்களை பகிரங்கப்படுத்துமாறு கோருவது ஏற்கக்கூடியதல்ல.

✪ ப.நோ.கூ சங்கங்களின் இணையம் என்ற வகையிலும், சட்டப்படியான ஒரு கூட்டுறவு அமைப்பு என்ற வகையிலும், அங்கத்தவர்களுக்கு வழங்கவேண்டிய சகல விவரங்களும அவர்களுக்கு வழங்கப்பட்டே வருகின்றன. இனியும் வழங்கப்பட்டே வரும் இதன் காரணமாகவே சங்கங்கள் யாவும் கூட்டுறவுக்குள் கூட்டுறவு என்ற அடிப்படையில் சமாசத்துடன் இணைந்து நம்பிக்கையுடன் செயற்படுகின்றன. மேலும், கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை செய்யும் கூட்டுறவுத் திணைக்களத்துக்கும் சகல தகவல்களும் வழங்கப்பட்டே வருகின்றன.

✪ 28.01.2001ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் நான் பேசும் போது 1996இல் இருந்து 2000ஆம் ஆண்டு தேர்தல் வரை பதவி வகித்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், 2000ஆம் ஆண்டு தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் எமது துறைக்கு இடையூறு செய்யாதும், அவதூறு செய்யாமலும், ஆதரவு தந்து வருவது பற்றி குறிப்பிட்டிருந்தேன். மீண்டும் அதையே வலியுறுத்த விரும்புகிறேன்.

✪ 17.01.2001ஆம் திகதி வடக்கு கிழக்கு ஆளுநரின் மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில் குடாநாட்டில் இந்தப் பிரச்சினையைப் பேசுவது என்பது அர்த்தமற்றது. எனவே, எவருடனும் பகிரங்க விவாதத்தில் ஈடுபட நாம் விரும்பவில்லையென்பதையும் எம் எல்லோரைப் பற்றியும் பொது மக்கள் நன்றாகவே அறிந்து கொண்டிருப்பதால் முடிவை அவர்களிடமே விட்டுவிடுவது என்பதையும் இவ்வாறான பத்திரிகை அறிக்கைகள் எவற்றிற்கும் இனிமேல் நாம் பதிலளிக்க மாட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

### கொக்குவில் மேற்கு
## மணியர்பதி இந்து இளைஞர் மன்றம்

மேற்படி மன்றத்தினால் சைவசமய அறிவுப் பரீட்சை ஒன்று ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ளது. இப் பரீட்சையில் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்கள் பங்குபற்றலாம்.

பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் பின்வரும் இடங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

01. ஆலய காரியாலயம்.
02. கிரிராஜ் சர்வதேச தொலைத்தொடர்பகம்: மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
03. கணேசன் தொலைத்தொடர்பகம்: கொக்குவில் சந்தி அருகில், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்,

விண்ணப்ப முடிவு திகதி:- 25.02.2001

(83574) செயலாளர்.

# திருஞானசம்பந்தரின் நினைவாக உதித்த வட்டு.மத்திய கல்லூரி

## நிறுவுநர் நினைவு விழாவில் உரை

வலிகாமம் மேற்கு,பெப்.1

இந்து சமயமும் தமிழும் என்றும் அழியாது இருக்கவேண்டும் என்ற பெரு நோக்குடன் திருஞானசம்பந்த நாயனாரின் பெயரில் எம்.எஸ். இராசரத்தினம் இப்பாடசாலையைக் கட்டினார். இன்று இப்பாடசாலை வட்டு. மத்திய கல்லூரியாக பெயர் மாற்றப்பட்டு இக்கிராமத்துக்குச் சேவையாற்றி வருகின்றது. இப்பாடசாலை மட்டுமன்றி பல பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு வழி அமைத்த பெருந்தகையாளர் அமரர் எம்.எஸ்.இராசரத்தினம்.

இவ்வாறு வட்டு.மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிறுவுநர் நினைவுப் பேருரையில் இளைப்பாறிய உபஅதிபர் சி.மருதப்பிள்ளை தெரிவித்தார்.

நினைவுப் பேருரை கல்லூரி அதிபர் வி.சிவஞானபோதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

விழாவை வட்டு.மத்திய கல்லூரி நிறுவுநரின் குடும்ப உறவினரான சிவலிங்கம் தம்பதியினர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

அமரர் எம்.எஸ்.இராசரத்தினத்தின் திருவுருவப் படத்தை ஆசிரியர் ஆறு. திருமுருகன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

நினைவுப் பேருரையில் "புதிய நூற்றாண்டில் இந்து சமய நிறுவனங்கள்" என்ற தலைப்பில் ஆசிரியர் ஆறு.திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். (க-175)


Pe... al Classes COMP... R STUDI... M.C.I

வசதியான நேரங்களில் பிரத்தியேகமான
**கணனிப்பயிற்சி வகுப்புகள்.**
உத்தியோகத்தர்களுக்கு உகந்தது. சிறுவர்களுக்கு விசேட வகுப்புக்கள்.

**புதிய பிரிவுகள்**
**ஆரம்பம்** 04.02.2001 ஞாயிறு பி.ப 3.00மணி (பு.நே)

ப.சிவானந்தசர்மா B.A (Hons),
கந்தசாமி கோயில் வீதி,
இணுவில்.

(83573)


# கிராம அபிவிருத்திச் சங்கம்
## இணுவில் தென்மேற்கு J.188
### புதிய நிர்வாக சபைத் தெரிவு

தலைவர் திரு.வே.குணரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
செயலாளர் - திரு.அ.நித்தியானந்தன்
பொருளாளர் - திரு.சொ.ஹரிகஜன்

**நிர்வாகசபை உறுப்பினர்கள்-**

திரு.இ.அம்பலவாணர் திரு.அ.காந்தருபன்
திரு.சி.இராசலிங்கம் திரு.இ.தனபாலசிங்கம்
திரு.பா.மனோகரன் திரு.இ.இராசேந்திரம்
திரு.ஆ.யோகலிங்கம் திருமதி.வ.கலாநிதி

ஆகியோர் 28.01.2001 அன்று நடைபெற்ற நிர்வாகசபைத் தெரிவுக் கூட்டத்தில் சபையோரால் தெரிவு செய்யப்பட்டனர்.

(c/15089) - நிர்வாகத்தினர்.


உ

## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில்
### தைப்பூசத் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் 07.02.2001 புதன்கிழமை தைப்பூசத்திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. பகல் விஷேட அஷ்டோத்திர சங்காபிஷேகத்துடனும் விசேட பூசை தீபாராதனையுடனும், விழா நடைபெற்று, இரவு எங்கள் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் மின் தொழில்நுட்ப ஊழியர் உடுப்பிட்டி K. சிறிபத்மநாதன் அவர்களால் மின் அலங்காரம் செய்யப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் அம்பாள் திருவீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறவுள்ளது.

கடந்த ஐம்பது வருடங்களாக இவ்வாலயத்தின் மின் இணைப்பு வேலைகளைச் செய்து வரும் ஸ்தாபனம் என்ற வகையில் எமது சேவையின் ஐம்பதாவது ஆண்டுப் பூர்த்தி வேளையில் இவ்வாலயத் திருமஞ்சம் மின் அலங்காரத்தால் அழகூட்டப்பட்டிருப்பது எமக்கு மனநிறைவைத் தருவதொன்றாகும். மிகவும் நெருக்கடியான கால கட்டங்களிலெல்லாம் இலகுவான முறையில் எமது மின்சார சேவைகளைச் சிறப்பாகச் செய்து வருவதற்கு அனுக்கிரகித்து கொண்டிருக்கும் அம்பிகையின் திருவருள், எதிர்காலத்திலும் எமக்குத் துணை நிற்கும் என்ற நம்பிக்கையுண்டு.

இன்றைய இத்தைப்பூசத்திருவிழாவைக் கண்டு களிப்பதற்காக யாழ்.குடாநாட்டின் பலபாகங்களில் இருந்தும் திரண்டு செல்லும் அடியார்களுக்கு அம்பிகையின் அனுக்கிரகம் இனிதே கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து, தைப்பூசப் பெருவிழா சிறப்பாக அமைய வேண்டுமென அம்பிகையை வேண்டி நிற்கின்றோம். அன்னதான ஒழுங்குகள் வழமைபோல செய்யப்பட்டுள்ளன. விழா சிறப்பாக அமைய ஒத்துழைப்பு நல்கி வரும் ஆலய அறங்காவலர் சபையினரையும், விழா உபயகாரர்களையும், மனமார வாழ்த்தி எல்லா நலன்களும் எல்லோருக்கும் இனிதே கிடைக்க அம்பிகையின் திருவருளை வேண்டி நிற்கும்

**நியூற்றோன் எலக்ரிக்கல்ஸ்**
141,143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2070.

(83580)

# பூமியதிர்ச்சி தாக்கிய போது உள்ளத்தை உருக்கிய சம்பவம்

## நேரில் கண்டவர் விவரிப்பு

புதுடில்லி,. பெப் 1

குஜராத்தில் பூகம்பம் தாக்கியபோது இடம்பெற்ற உருக்கமான சம்பவங்களை இந்தியப் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன.

அகமதாபாத்தில் 10 மாடிக் கட்டடம் ஒன்றின் அருகில் குடியிருந்தவர் தெரிவித்ததாக 'டைம்ஸ் ஒவ் இந்தியா'' பிரசுரித்துள்ள சம்பவம் இது.

10 மாடிக்கட்டடத்தின் 5 ஆவது தளத்தில் வசித்த குழந்தை ஒன்று தனது வீட்டின் 'பல்கனி'யில் நின்று விளையாடிக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் பூமியதிர்ச்சியால் 10 மாடிக் கட்டடம் அசைந்தது. நிலைமையின் விபரீதத்தை உணராத அச் சின்னஞ்சிறிய பெண்குழந்தை 'டாடி, டாடி, பல்கனி படகுபோல் ஆடுகிறது. ஓடி வந்து பாருங்கள்' என்றபடியே கைதட்டிச் சிரித்து குதூகலத்தில் துள்ளிக்குதித்தது.

ஆனால் அடுத்த வினாடியே 10 மாடிக்கட்டடம் இடிந்து நொறுங்கித் தரைமட்டமாகியதில் பூப்போல் சிரித்த அந்தக் குழந்தை இடிபாடுகளுக்குள் புதைந்து போனது.

அந்தக் குழந்தையின் உடல் இதுவரை மீட்கப்படவில்லை என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர் கூறியுள்ளார்.

குழந்தையின் சிரித்த முகமும், இந்தக் கொடூரச் சம்பவமும் தன்னை மிகவும் பாதித்து விட்டதாகவும் அவர் கண்ணீருடன் கூறியதாக 'டைம்ஸ் ஒவ் இந்தியா'' செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ-7)

# மேற்காசியப் பிரச்சினை குறித்து உடன்பாடு ஏற்படாத நிலையில் அமைதிப் பேச்சு கைவிடப்பட்டது

கெய்ரோ, பெப். 1

எகிப்தில் நடைபெற்ற மேற்காசிய அமைதிப் பேச்சுவார்த்தை உடன்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்தது.

கடற்கரை நகரான தாவாவில் இஸ்ரேலிய, பலஸ்தீனத் தரப்புகளின் பிரதிநிதிகள் சர்ச்சைக்குரிய விடயங்களில் உடன்பாடு காண்பதற்கான பேச்சுக்களில் ஒருவார காலமாக ஈடுபட்டிருந்தனர்.

இடையிடையே பல்வேறு தடங்கல்கள் ஏற்பட்டபோதும் பேச்சுத் தொடர்ந்து நடைபெற்றதால் இருதரப்புகளிடையே உடன்பாடு ஒன்று ஏற்படுத்தப்படும் என நம்பிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் சமீபத்தில் இருதரப்பினரும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் உடன்பாடுகள் எதுவும் எட்டப்படாமலேயே பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெருசலேமின் அந்தஸ்து, பலஸ்தீன அகதிகளின் எதிர்காலம் போன்ற சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து அதிகம் பேசப்பட்டதாகவும்—

கால அவகாசமின்மையால் உடன்பாடு ஏற்படுத்தப்படவில்லை என்றும் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெற உள்ள இஸ்ரேலியப் பிரதமர் பதவிக்கான தேர்தலின் பின்னரே உடன்பாடு ஏற்படுத்தப்படும் என்று இடைக்காலப் பிரதமர் எகுட் பராக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் சுவிட்சர்லாந்தில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தும், இஸ்ரேலிய முன்னாள் பிரதமர் சிமொன் பெரஸும் பரஸ்பரம் கடுமையான குற்றச்சாட்டுக்களைப் பரிமாறிக் கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. [ஒ-5-7]

# இஸ்ரேலியப் பிரதமர் தேர்தலில் ஷரோன் வெல்வது உறுதியாம்

## அதனால் அமைதி குறித்து சந்தேகம்

டெல்அவிவ், பெப். 1

இஸ்ரேலின் அடுத்த பிரதமராக எதிர்க்கட்சித் தலைவரான ஏரியல் ஷரோன் தெரிவு செய்யப்படுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் மேற்காசியாவில் அமைதி ஏற்படுவதில் சந்தேகம் எழுந்துள்ளது.

இஸ்ரேலில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெற உள்ள பிரதமர் தேர்தலில் ஷரோனுக்கு மிகப் பெரும் ஆதரவு கிட்டியுள்ளது தெரிய வந்துள்ளது.

தீவிரப் போக்குடைய ஷரோன் இஸ்ரேலியப் பிரதமரானால் பலஸ்தீனருடனான பேச்சுக்களில் விட்டுக்கொடுப்புகள் இடம்பெறாது என்றும்—

பலஸ்தீனம் தொடர்பான இஸ்ரேலின் போக்கு கடுமையாகும் என்றும் கருதப்படுகிறது.

இதனால் மேற்காசிய அமைதிக்கான உடன்பாடு ஏற்படுத்தப்படுவது கைகூடாமல் போகலாம் எனவும் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஏரியல் ஷரோன், ஜெருசலேமில் சர்ச்சைக்குரிய மசூதி ஒன்றுக்கு விஜயம் செய்ததை அடுத்தே மேற்குக்கரையில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டுத் தொடர்வது குறிப்பிடத்தக்கது. [ஒ-7]

# நபியின் போதனைக்கு எதிரான பாகிஸ்தானியப் பத்திரிகை தடை

இஸ்லாமாபாத், பெப். 1

பாகிஸ்தானில் இஸ்லாத்துக்கு எதிரான கருத்துக்களை எழுதியதற்காகப் பத்திரிகை ஒன்று தடைசெய்யப்பட்டுள்ளது.

வடமேற்கு மாகாணத்திலிருந்து வெளிவரும் 'பிரென்ட்ஷிப் போஸ்ட்' என்ற பத்திரிகையே தடைசெய்யப்பட்டுள்ளது.

இப் பத்திரிகையின் ஆசிரியர் பிட ஊழியர்கள் 6 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் நபிகள் நாயகத்தின் போதனைகளுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டதாக இவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், கராச்சியில் இஸ்லாமிய மத அறிஞர்கள் சிலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

'சன்னி' பிரிவைச் சேர்ந்த இந்த மத அறிஞர்கள் சமய போதனைப் பாடசாலையின் அருகில் இனந் தெரியாத கும்பல் ஒன்றினால் தாக்கிக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்துக் கராச்சியில் 'சன்னி' மற்றும் 'ஷியா' பிரிவுகளிடையே மோதல்கள் இடம்பெறக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

அப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ-7)

# குஜராத் பூகம்ப சோகத்திலும் ஆறுதல் அளிக்கும் ஒரு நிகழ்வு

குஜராத் பூமியதிர்ச்சி ஏற்படுத்திய சோகத்திலும் ஓர் ஆறுதல் அளிக்கும் நிகழ்ச்சி நடந்துள்ளதாக இந்தியப் பத்திரிகைகள் சில செய்திகள் வெளியிட்டுள்ளன.

அச்செய்திகளில் குஜராத் மாநிலத்துக்குநிவாரண உதவிகளை பாகிஸ்தான் அனுப்பிவைத்துள்ளதே அந்தச் சம்பவம் எனக் கூறப்பட்டுள்ளது.

பூமியதிர்ச்சியால் பாகிஸ்தானிலும் உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் ஏற்பட்ட நிலையிலும், இந்தியாவுக்கு உதவிகளை வழங்குவதாக பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் அறிவித்தார்.

தற்போதைய நெருக்கடி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது என்று பாகிஸ்தானிய உயரதிகாரிகளும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

அத்துடன், பல்லாயிரக்கணக்கான கூடாரங்கள், போர்வைகள் மற்றும் படுக்கைகள் ஆகியவற்றை பாகிஸ்தான் விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது

பாகிஸ்தான் பரமஎதிரியாகக் கருதும் இந்தியாவுக்கு உதவி வழங்கியதன் மூலம் இரு தரப்புகளுக்கும் இடையே சமுக நிலை ஒன்று தோன்றியிருப்பதாகவும் —

காஷ்மீர்ப் பிரச்சினையில் சுமுகத் தீர்வை ஏற்படுத்த இது நிச்சயமாக ஒரு சாதகமான நிலையை உருவாக்கும் என்றும் —

இந்தியப் பத்திரிகைகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (ஒ)

# இந்தோனேசிய அதிபர் வாஹிட்டின் ஊழலுக்கு ஆதாரம் உண்டாம்!

## நாடாளுமன்றக் குழு தெரிவிப்பு

இந்தோனேசிய அதிபர் அப்துர் ரஹ்மான் வாஹிட் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதற்கு ஆதாரங்கள் உண்டென்று நாடாளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்துள்ளே வாஹிட் மீது பல முறைப்பாடுகள் எழுந்திருந்தன. இந்த முறைப்பாடுகள் குறித்து விசாரிக்க இந்தோனேசிய நாடாளுமன்றம் ஒரு குழுவை அமைத்தது.

வாஹிட் மீது சுமத்தப்பட்ட முக்கிய குற்றச்சாட்டுகளான, பலகோடி டொலர்கள் ஊழல் புரிந்ததாகக் கூறப்படும் 2 முறைப்பாடுகள் பற்றி நாடாளுமன்றக் குழு விசாரணை நடத்தியது.

விசாரணையின் முடிவில் அந்தக்குழு சமர்ப்பித்த அறிக்கையில், வாஹிட் ஊழல்களில் சம்பந்தப்பட்டிருந்ததற்கு போதிய ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்-

அதிபர் வாஹிட் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தகுதியற்ற அவரது உறவினர்களுக்கு அதிபர் மாளிகையில் பதவிகளை வழங்கியுள்ளார் என்றும்—

பொது மக்களுக்குத் தவறான தகவல்களைத் தருவதன் மூலம் அவர்களை ஏமாற்றி பல கோடி டொலர்களை ஊழல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுகார்ட்டோவின் ஊழல் மோசடிகளால் மனம் சலித்திருந்த இந்தோனேசிய மக்கள் அப்துர் ரஹ்மான் வாஹிட் அதிபர் பதவியேற்ற போது அவர் மீது அதிக நம்பகமான எதிர்பார்ப்பை வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

தீவிரமதப் பற்றாளரான வாஹிட் ஊழலற்ற நிர்வாகியாக இருப்பார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பதவியேற்ற குறுகிய காலத்திலேயே தமது எதிர்பார்ப்புகளை வாஹிட் நிர்மூலமாக்கி விட்டார் என்றே இந்தோனேசிய மக்கள் கருதுகின்றனர். (ஒ-7)

# குஜராத் வானில் வட்டமிடும் கழுகுகளும் பருந்துகளும்

புஜ், பெப். 1

குஜராத்தில் பூமியதிர்ச்சியால் இறந்தவர்களது சடலங்களின் வாடையால் கஜ் மாவட்ட வானில் ஆயிரக் கணக்கான கழுகுகளும் பருந்துகளும் வட்டமிடுகின்றன.

பூமியதிர்ச்சி ஏற்பட்டு 5 நாள்கள் ஆகியதால் மீட்கப்படும் சடலங்களில் துர்நாற்றம் அதிகமாக உள்ளது.

சடலங்களைத் தனித்தனியாகத் தகனம் செய்வதற்கு வசதிகள் போதாமையால் பல சடலங்களை ஒன்றாகச் சேர்த்து தகனம் செய்கிறார்கள் அதனால் சடலங்கள் முற்றாகச்சாம்பலாகாமல் எஞ்சியிருப்பதும் மாவட்டம் முழுவதும் துர்நாற்றம் ஏற்படக் காரணம் என்று கூறப்படுகிறது.

சடலங்களில் இருந்து தொற்று நோய்கள் பரவும் வாய்ப்பிருப்பதால் அவற்றை அகற்றி அழிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

விரிசல்விட்ட அடுக்குமாடிக் கட்டடங்கள் இடிந்து விழுந்து உயிர்ப்பலிகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அவற்றை இராணுவத்தினர் வெடிகுண்டு வைத்துத் தகர்த்து வருகின்றனர்.

( ஒ )

# ஈரானுக்கு ஏவுகணை நுட்பம் வழங்கிய வடகொரிய நிறுவனத்தின் மீது அமெரிக்கா வர்த்தகத் தடை

ஈரானுக்கு ஏவுகணைத் தொழில நுட்பத்தை வழங்கியதற்காக வடகொரிய நிறுவனம் ஒன்றுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

தென்கொரிய அதிகாரிகள் இத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்திருந்ததற்காக வடகொரியா மீது பல ஆண்டுகளாகவே அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்து நடைமுறைப்படுத்தி வந்தது.

கடந்த ஆண்டில் வடகொரியா தனது இறுக்கமான கம்யூனிசக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதுடன் 50 ஆண்டுகாலமாக தென்கொரியாவுடன் கொண்டிருந்த பகைமை உணர்வையும் விலக்கிக்கொள்ளமுன்வந்தது.

இதனையடுத்து கடந்த ஆண்டு ஜூன் மாதம் வடகொரியா மீதான தடைகளை அமெரிக்காவிலக்கியது.

அதன் பின்னர் வடகொரிய நிறுவனம் மீது அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ—7)

# தாயும் சேயும் மீட்பு

அகமதாபாத்தில் பூமியதிர்ச்சினால் இடிந்த அடுக்குமாடிக் கட்டட இடிபாடுகளுக்குள் 100 மணித்தியாலங்களுக்கு மேல் சிக்கியிருந்த 25 வயதுப் பெண்ணும் அவரது 2 வயதுக் குழந்தையும் உயிருடன் மீட்கப்பட்டனர.

இவர்களுக்கு காயங்கள் எதுவும் ஏற்படாமலிருந்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு;
04-03-1926

உதிர்வு:
04-02-1998

## தம்பையா கதிராசி

ஆண்டு மூன்று கடந்தாலும் ஆறாது எம்துயர்
மாண்டு விட்டாய் எம்மைப் பிரிந்தாயோ
மீண்டும் எப்போது எம்மிடம் வந்திடுவாய்
ஆண்டு பல சென்றாலும் காத்திருப்போம்
உம்வரவை!

என்றும் நினைவுடன்
**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

நிரந்தர முகவரி:-
சரசாலை மத்தி,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:-
சு. குணபாக்கியம்,
மே/பா இ. மகாலிங்கம்,
புன்னாலைக்கட்டுவன் தெற்குச்சந்தி.

[83602]

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி பெனிக்னா றாபினி அருளப்பு
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி மேரி திரேசா அருளப்பு

அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பெற்றார்.**

யா / நாரந்தனை கணேச வித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.

(83596)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி அமிர்தவல்லி சின்னத்தம்பி

( நுணாவில் மத்தி - சாவகச்சேரி )

தென்மராட்சி பிரதேச செயலகத்தில்
நிதி உதவியாளராகக் கடமை புரியும்
திரு. சின்னத்தம்பி இராமச்சந்திரனின்
அருமைத் தாயார்
திருமதி அமிர்தவல்லி சின்னத்தம்பி

02 - 01 - 2001 ஆம் திகதி சிவபதம் அடைந்ததையொட்டி நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தை இராமச்சந்திரன் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு இன்றைய தினம் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

**பிரதேச செயலரும்,
சகல உத்தியோகத்தர்களும்,
பிரதேச செயலக நலன்புரிச்சங்கம்,
தென்மராட்சி.**

(சி/15086)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்:
06
—
05
—
1926



மறைவு:
19
—
12
—
2000

## அமரர் வேதமுத்து அற்புதம்

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய யா/உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மருமகள் **தா. மேரியோகராணி**
சகோதரி **வே. அன்னலட்சுமி**

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(83598)

# யாழ். கல்வி அலுவலக சுற்றாடலில் நாய்கள் அட்டகாசம்

குருநகர், பெப். 1

யாழ். வலயக்கல்வித் திணைக்களச் சுற்றாடலில் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகிறது.

சொறி, குட்டையுடன் காணப்படும் நாய்கள் பல கல்வித் திணைக்களத்தில் சேவையாற்றும் பணியாளர்கள் மற்றும் கல்வித்திணைக்களத்துக்கு வருபவர்களுக்கு இடைஞ்சலாக உள்ளன.

நாய்கள் அலுவலகப் பகுதியிலேயே தங்கி இருப்பதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்று பணியாளர்கள் முறையிடுகின்றனர்.

# குமுதினி மீண்டும் சேவையில்

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையிலான குமுதினிப் படகுச் சேவை நாளை வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

குமுதினிப் படகு பழுதடைந்திருந்த காரணத்தினால் இந்தச் சேவை இடை நிறுத்தப்பட்டிருந்தது.

# அஞ்சல் அறிமுக அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 1

தபாற் திணைக்களத்தின் பிரதேச நிர்வாக அலுவலகத்தினால் கடந்த ஆண்டில் 12 ஆயிரத்து 468 அஞ்சல் அறிமுக அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 2 ஆயிரத்து 794 அட்டைகள் வெளிமாவட்டங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன—

யாழ். மாவட்டத்தில் 8 நிலையங்களில் நடாத்தப்பட்ட நடமாடும் சேவையின் மூலம் 643 அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும்—

நிர்வாக அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(க-10)

# இறப்புப் பதிவு கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் காணாமல் போனவர்களை இறந்தவர்களாகக் கருதி இறப்புப் பதிவு செய்யும் 1998 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தின் கால எல்லை—

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக மேலதிக மாவட்ட பதிவாளர் ந. சதாசிவஐயர் தெரிவித்துள்ளார்

(க-10)

# தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 1

தோட்டப்பாடசாலைகளில் கடமை புரிந்து 1995க்கும் 2000க்கும் இடையில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களில் தோட்டப்பாடசாலைச் சேவை ஓய்வூதியத்தில் சேர்த்துக் கொள்ளப்படாதவர்கள், சேவை செய்ததற்குரிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வருகை தருமாறு யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(உ)

# அறிவித்தல்

வலி. மேற்கு
## இந்து ஆலயங்களின் மகாசபை
சுழிபுரம்

வலி. மேற்கில் அமைந்துள்ள சகல இந்து ஆலயங்களின் நிர்வாகத் தலைவர், செயலாளர், மகாசபை பிரதிநிதிகள் யாவரையும் எதிர்வரும் 03- 02- 2001 சனிக்கிழமை மாலை 3. 30 மணிக்கு எமது பிரதேச சபைதலைமைக் காரியாலயத்தில்சந்திக்குமாறுகேட்டுக் கொள்கின்றேன். அன்றைய தினம் மகாசபைக்கான யாப்பு விதி, ஆராயப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படும். இந்து சமய அபிவிருத்தி பற்றிய வேறு முக்கிய விடயங்களும் ஆராயப்படும்.

தவறாது சமூகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. ந. திரிலோகநாதன்**
போசகர், வலி. மேற்கு,
இந்து ஆலயங்களின் மகாசபை.

(சி/15096)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மதியழகன் கௌரீஸ்வரி

சந்திரத்தை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் உக்கிழாங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதியழகன் கௌரீஸ்வரி நேற்று (31-01-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்வநாயகம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் இராசையா மதியழகன் அவர்களின் அன்பு மனைவியும் கிருபாகரன் (வவுனியா), பிரபாகரன் (லண்டன்), சிவாகரன் (லண்டன்), ஜெயாகரன், சிவரூபி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-2-2001) வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

தகவல்:
**க. அருளானந்தம்**
(மருமகன்)

பொற்பதி றோட்,
கோண்டாவில்.

(83607)

## பரமானந்தம் சறோஜினிதேவி

6 ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த பரமானந்தம் சறோஜினிதேவி அவர்கள் குவைத்தில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தம் - திருமதி சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகளும் திருமதி ஏ. வனிதாமணிதேவி, திருமதி அ. சுசிலாமணிதேவி, திருமதி அ. யாழினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஏகாம்பரம் மற்றும் அருளானந்தம், அருள்குமரன் ஆகியோரின் மைத்துனியும் திருமதி சோ. செல்லாச்சியின் பெறாமகளும் க.சுப்பையாவின் மருமகளும் பாஸ்கரன், ஞானசேகர், சந்திரசேகர், காலஞ்சென்ற குணசேகர் மற்றும் விக்னேஸ்வரி, பிரபாகரன், கஸ்தூரி, அருளினி, சிவகுமாரதாஸ், தனுஷன், பரமஹம்சன், பவித்ரா ஆகியோரின் பெரியதாயாரும் பிரவீணாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-2-2001) வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்;
**குடும்பத்தினர்**

124/2, செல்லர் வீதி,
நல்லூர்.

(83605)

## சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி

(அப்பாத்துரை)

மூளாயைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி (அப்பாத்துரை) நேற்று முன்தினம் (30 - 01 – 2001) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் மூளாயைச்சேர்ந்த சுப்பிரமணியம் முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், வினாசித்தம்பி (மட்டக்களப்பு), அன்னலச்சுமி (வடலியடைப்பு), பாலசுப்பிரமணியம் (லண்டன்), சுந்தரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நாகராசா, நித்தியானந்தராசா, பானுரேகா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், றஸ்கா, சுரேஸ், லக்சாயினி, கிரிசாயினி, சுபஸ்ஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2-2-2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு வடலியடைப்பு, பண்டத்தரிப்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மு. வினாசித்தம்பி**
(மகன்)

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(83611)

# அன்புடன் வாழ்த்துகின்றோம்



முன்னாள் யாழ்.மாநகர ஆணையாளர்

**வே.பொ.பாலசிங்கம் அவர்கள்**

வடக்கு – கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதவியேற்றிருப்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் பாராட்டுவதுடன் அவரது பணி மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.

(83594)


## அறுவடை பாதிப்பு

சண்டிலிப்பாய்,பெப்.1

தற்போது பெய்துவரும் மழையினால் நெல் அறுவடை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வரும் இவ்வேளையில் மழை தொடர்ந்து பெய்து வருவதையிட்டு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (க-135)

## புளியங்கூடலில் தாய் - சேய் சிகிச்சை நிலையம்

காரைநகர்,பெப்.1

ஊர்காவற்றுறை, புளியங்கூடலில் அமைக்கப்பட்ட தாய் - சேய் சிகிச்சை நிலையம் சுகாதார திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் இறுதி வியாழக்கிழமைகளில் சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கு கடந்த ஆண்டு யுனிசெவ் நிறுவனம் 45 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியிருந்தது. இதற்குத் தேவையான தளபாடங்கள் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட உள்ளன. (க-73)

## வலிகாமம் அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.1

உடுவில், தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும்-

சங்கானை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் அதே தினம் முற்பகல் 11.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறும் என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (உ-7)


## தவறிவிட்டது

அம்பலவாணர் உதயகுமார் 'மங்களபவான்', உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். ஆகிய விலாசத்தில் வசிக்கும் என்னுடைய 633112169V இலக்கமுடைய அடையாள அட்டையும் 0903042635 இலக்கமுடைய வீசேட அடையாள அட்டையும் NDL 374639 சாரதி லைசென்ஸ் பத்திரமும் J-21-SA-3977 இலக்கமுடைய கல்வித்திணைக்கள அடையாள அட்டையும் திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தொலைந்து விட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது 75, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். ஆகிய விலாசத்தில் ஒப்படைக்கவும். ஒப்படைப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (83610)



# 16ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 - 11 - 1959



உதிர்வு 17 - 01 - 2001

**அமரர் அனஞ்சித்தேவர் சத்தியமூர்த்தி**

(சிவன் மிக்சர் உரிமையாளர்)

16ஆம் நாள் மறைந்தும் உங்களை விட்டு எங்கள் நினைவுகள் நீங்கவில்லை. எம் பாசத்தின் உறைவிடமே! எங்களை வழி நடத்தி கைத்தொழிலைக் கற்றுத் தந்த அன்புத் தெய்வமே! உங்கள் மனைவி, பிள்ளைகள், உள்ளம் கலங்கி நிற்கின்றனர். அப்பா என்றென்றும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது உங்கள் வழியில் நாங்கள் நடப்போம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*12/2,கன்னாதிட்டி வீதி,*
*சிவன்கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.*

மனைவி, பிள்ளைகள்,
மாமா, மருமகன். (83608)



# 100ஆவது நாள் நினைவு தினமும் நன்றி நவிலலும்

ஆண்டவன் படைப்பில் 21 - 07 - 1976



அநியாய அழிப்பில் 25 - 10 - 2000

**அமரர் செல்வராசா துரைராசா**

25-10-2000 அன்று படுகொலை செய்யப்பட்ட எனது சகோதரனின் பூதவுடலை கொண்டுவந்து தந்த உதவி அரச அதிபர் மற்றும் அதற்கு உதவி செய்தவர்களுக்கும், இறுதி ஆராதனையை நடத்திய தென்னிந்திய பேராயர் சு.ஜெபநேசன் அவர்களுக்கும், குருமார்களுக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், ஆராதனை ஒழுங்கு அச்சிட்டுத் தந்தவர்களுக்கும் பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பாடல்கள் பாடியவருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி ஊடாகவும், கடிதம் மூலமும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், வேறு பல உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் இதய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அளவெட்டி மேற்கு,*
*தம்மளை.*

(C/15098)

- குடும்பத்தினர்.



# பரந்தன் கெமிக்கல்ஸ் கொம்பனி லிமிட்டெட்

## சத்துணவு (திரிபோஷா) தயாரிப்பதற்கு வீடு/கட்டடம் வாடகைக்குத் தேவை

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் பரந்தன் கெமிக்கல்ஸ் கொம்பனி லிமிட்டெட்டுக்கு யாழ்.நகரிலிருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தினுள் நீர், மின்சாரம், பிரதான வீதிக்கான போக்குவரத்து வசதிகள் கொண்டதும் 3000 சதுர அடிக்குக் குறையாததும் களஞ்சிய வசதி கொண்டதுமான நல்ல நிலையிலுள்ள வீடு/கட்டடம் சத்துணவு (திரிபோஷா) தயாரிப்பதற்கு உடன் வாடகைக்குத் தேவைப்படுகிறது. வீடு/கட்டடம் வாடகைக்குக் கொடுக்க விரும்பும் உரிமையாளர்கள் வீடு/கட்டடம் இருக்கும் அமைவிடம், முகவரி, காணியின் விஸ்தீரணம், எதிர்பார்க்கப்படும் மாத வாடகை, குத்தகைக்காலம் போன்ற சகல விவரங்களும் கொண்ட விண்ணப்பத்தை 10-02-2001க்கு முன் கிடைக்கக் கூடியதாக எமது தலைமைக் காரியாலயத்துக்கோ அல்லது 53/4, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். என்ற முகவரியில் இயங்கும் தற்காலிக காரியாலயத்துக்கோ அனுப்பவும்.

100/25, ஸ்ரீ இராமநாதன் றோட்,
கொழும்பு-13.
தொலை நகல் இல. 437831

பொ.தியாகராசா,
தலைவர்,
பரந்தன் கெமிக்கல்ஸ் கொம்பனி லிமிட்டெட்.

(C/15090)



## மாணவ மாணவிகளே! லாலா சோப் - சன்சயின் சோப்

10, 10ஆக சோப்பின் எவ்வளவு மேல் உறைகளும் அனுப்பலாம்

● உங்கள் பெயர், பாடசாலை, விலாசம்

ஆகியவற்றை எழுதி உங்கள் வாடிக்கைக் கடையில் அல்லது எமது காரியாலயத்துக்கு அல்லது எமது வியாபார வாகனத்தில் அனுப்பி வையுங்கள்.

*அதிர்ஷ்டத்தில் செல்வர்களுக்கு*

**ஒருவருக்கு 1,000 ரூபா விதம் ஐந்து பேருக்கு வழங்கப்படும்**

இன்று தொடக்கம் ஆரம்பியுங்கள்

**லாலா சோப் தொழிற்சாலை**

(C/15093) அச்சுவேலி.



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
ஓம் நாராயணன் துணை

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 16.03.1918

உதிர்வு 12.01.2001

**செல்லையா தில்லைநாதன்**

அன்புடனும் பாசத்துடனும் எம்மையெல்லாம் வளர்த்து சிறப்புடன் வாழ வழிநடத்தி கண்ணை பாதாரவிந்தமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (01-02-2001) வியாழன் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், கண்ணன் மெய்யன்பர்கள் அனைவரும் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*'செல்வி வாசம்'*
*காளிகோவிலடி*
*கோப்பாய் மத்தி*

(83603)

தங்கள் பிரிவால் வாடும்
மக்கள், மருமக்கள்,பெறாமக்கள்
பேரப்பிள்ளைகள்.



# இப்போது யாழ்ப்பாணத்தில் சர்வதேச BUZZ MAIL

பஸ்(Z) மெயிலானது முதல் தடவையாக உலகம் பூராகவும் சொந்தக் குரல் மூலம் தகவலை அனுப்பவும் பெற்றுக்கொள்ளவும் முடியுமான சேவை. ஏதாவது ஒரு தொலைபேசியில் பஸ்(Z) மெயிலை அடையும் இலக்கத்தை அழுத்தி உங்களது பஸ்(Z) மெயில் இலக்கத்தை அழுத்தவும்

*மாதாந்தக் கட்டணம் எதுவும் இல்லை!*

*உறவினர்கள், நண்பர்களிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வரும்வரை காத்திருக்கத் தேவையில்லை. கடிதங்கள் எழுதத் தேவையில்லை.*

உலகம் பூராகவும் பஸ்(Z) மெயில் சேவை பெற்றுக்கொள்ள முடியுமான நாடுகளுக்கு வேண்டிய தொலைபேசியை பாவித்து தகவல்களை அனுப்பவும் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

*நான்கு இலகுவான வழி முறைகளில் எவ்வாறு சேவையைப் பயன்படுத்தலாம்.*

1) தொலைபேசியை தூக்கி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உள்ளூர் அடைதல் இலக்கத்தைச் சுழற்றுங்கள்.
2) உங்கள் தனிப்பட்ட பஸ்(Z) மெயில் (Buzz Mail) இலக்கத்தையும் இரகசிய இலக்கத்தையும் அழுத்துங்கள்.
3) செவிமடுப்புடன் இலகுவான பணிப்புரைகளைப் பின்பற்றுங்கள்.

*இதற்கான செலவு*

மூன்று மாதத்துக்கு 500 ரூபா மட்டுமே செலுத்தி காலவரையற்ற பாவனையைப் பெற்றுக்கொள்ளலாம். தினந்தோறும் உங்களுக்குத் தகவலை அனுப்பவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

*மேலும் தகவலுக்கு:*

**SRI MURUGAN TELE COMMUNICATION**

303,K.K.S. ROAD, JAFFNA.
T.P.:021-2670, 3214, 2170 FAX: 021-3214
074 - 517917
E-Mail: DELSMSKR@eureka.lk.
SM S COMJA@slt Net.lk.





(C/15091)

## மடுவில் பேரணி

வவுனியா,பெப்.1

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட "பொங்கு தமிழ்" நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றிய பேரணி ஒன்று நேற்று மடுவில் நடத்தப்பட்டது.

பண்டிவிரிச்சான் - 16ஆம் வீட்டுச் சந்தியில் ஆரம்பித்த இந்தப் பேரணி மடுத் தேவாலயத்தில் முடிவடைந்தது. (உ-7-164)

---

## சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல் ஏதும் வெளியிடப்படவில்லை.

புலிகள் - அரசு நேரடிப் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்குடன் நோர்வே முன் வைத்திருக்கும் புரிந்துணர்வு உடன்பாடு பற்றிய முன்மொழிவு குறித்து இந்தப் பேச்சின்போது ஆராயப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

எனினும் யுத்தத்தை ஒருபுறம் நடத்திக்கொண்டு மறுபுறத்தில் பேச்சை மேற்கொள்வதிலேயே அரசுத் தரப்பு தொடர்ந்து ஆர்வம் காட்டுவதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று நாள்கள் கொழும்பில் சொல்ஹெய்ம் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று காலை 10 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அவர் சந்தித்துப் பேசுவார்.

அவர் இம்முறை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திப்பதற்கு வன்னி செல்வாரா என்பது குறித்து நேற்றிரவுவரை ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ-6-7)

## மின்சாரம் தாக்கிச் சிறுவன் மரணம்

வவுனியா,பெப்.1

வவுனியா சமயபுரத்தில் நேற்று முன்தினம் இரவு திருட்டு மின்சாரம் பெற முயன்ற சமயம் மின்சாரம் தாக்கி 11 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

பேரம்பலம் காளிதாசன் என்ற 11வயதுச் சிறுவனே உயிரிழந்தான்.

இந்தச் சிறுவனைக் காப்பாற்றச் சென்ற 9 வயதுச் சிறுவனான சக்திவேல் மற்றும் சின்னப்பன் பெருமாள் (வயது56) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த சிறுவன் பிறப்பிலேயே வாய் பேசமுடியாதவன் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6-164)

## புலிகள் தரப்பில் இருவர் மரணம்

வவுனியா,பெப்.1

கிளாலிப் பகுதியில் கடந்த மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

✪ இரண்டாம் லெப்டினன்ட் புதியவள் (தாமோதரம்பிள்ளை யோகரதி - யாழ்ப்பாணம்)

✪ ரகு அல்லது சேந்தன் (ஜெயராசா நரேந்திரன் - யாழ்ப்பாணம்)

(உ-6-164)

## வன்னி சென்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நானும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரு அரசாங்க அமைச்சர்களும்,பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள் மூவரும் வன்னிக்கு வந்து உங்களை அல்லது உங்கள் பிரதிநிதிகளை நேரில் சந்தித்துப் பேசவிரும்புகிறோம்.

"தரைவழிப் பாதை திறத்தல்- போர்ச் சூழலுக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ்மக்களின் போக்குவரத்து, மின்சாரம், எரிபொருள், சுகாதாரம் மற்றும் கல்விப் பிரச்சினைகள்-

"இது விடயத்தில் அரசின் போக்கால் எழுந்துள்ள நெருக்கடிகள், அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் -

ஆகியவை குறித்துக் கலந்துரையாட விரும்புகிறோம்" -என்று மகேஸ்வரன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தாங்கள், வன்னி சென்று பிரபாகரனைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதி வழங்கும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் மகேஸ்வரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அனுமதி வழங்கப்பட்டதும் தம்முடன் வன்னிக்கு வரவிருக்கும் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களின் பெயர் விவரங்களைத் தாம் அனுப்பி வைப்பதாகவும் அக்கடிதத்தில் மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (உ)

---

## யாழ்.இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் எப்போதும் இல்லாதவாறு இந்தத் தேசிய அணர்த்தத்தை எதிர்கொள்வதற்கு வேண்டிய துணிவையும், பலத்தையும் எல்லாம் வல்ல சிவபெருமானும், இராமபிரானும் தங்களுக்கு வழங்கவேண்டும் - என்றுள்ளது. (உ-7)

---

## சாவகச்சேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியக்கூறு காணப்படுகின்றதா என்பது தொடர்பாக ஆராய்வதற்காக கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் யாழ். மாநகர சபை முதல்வர் என்.ரவிராஜ் மற்றும் மாநகரசபை உறுப்பினர் எஸ்.அரவிந்தன் ஆகியோர் அடங்கிய தூதுக் குழுவினர் நேற்று அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தனர். சாவகச்சேரி நீதிமன்றம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வைத்தியசாலை மற்றும் பாடசாலைக் கட்டடங்கள் உட்படக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் தூதுக் குழுவினர் மேற்படி கருத்தை வெளியிட்டனர். (உ-6)

## மெய்வன்மை விளையாட்டுகள் பற்று

# கருத்தரங்கு நாளை ஆரம்பம் சனி முதல் பயிற்சி முகாம்

## யாழ்.மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம்,பெப்.1

மெய்வன்மைச் சட்ட விதிகள் பற்றிய கருத்தரங்கு நாளை காலை 9 மணிக்கும்-

மெய்வன்மைப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாம் நாளை மறுதினம் காலை 10 மணிக்கும்-

யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகும் என யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச அமெச்சூர் மெய்வன்மைச் சம்மேளனத்தின் **(IAAF)** இலங்கைப் பயிற்றுநர் சங்கமும் யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கமும் இணைந்து இந்தக் கருத்தரங்கு மற்றும் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்துள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி தேசிய ரீதியில் நடைபெறவிருக்கும்- மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்ற அலுவலர்களைத் தெரிவு செய்வதற்கும், தரமுயர்த்துவதற்குமென- பரீட்சையை ஒட்டிய வழிகாட்டல் கருத்தரங்கே நாளை ஆரம்பமாகின்றது. பரீட்சைக்குத் தோற்றும் அனைவரும் இந்த வழிகாட்டல் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நாளை முதல் 5ஆம் திகதி வரை தினசரி காலை 9 மணி முதல் மாலை 5மணி வரை இக்கருத்தரங்கு வகுப்புக்கள் நடைபெறும்.

பயிற்சி முகாம் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை நடைபெறும். தொடர்ந்து 4ஆம் ,5ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பயிற்சி முகாம் நிகழ்வுகள் இடம் பெறும்.

இறுதிநாள் வைபவரீதியான நிகழ்ச்சி 6 ஆம் திகதி இடம்பெறும்.

இந்தப் பயிற்சி முகாமில் பங்குபற்றுவோரை மெய்வன்மைப் போட்டிகளுக்கான உடைகளுடனும், மெய்வன்மை நிகழ்ச்சிகளுக்கான கருவிகள், உபகரணங்கள் போன்றவற்றுடனும் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி முகாம் மற்றும் கருத்தரங்கை நடத்துவதற்காக கொழும்பிலிருந்து பத்துப் பயிற்சியாளரைக் கொண்ட விசேட அணி ஒன்று இன்றும் நாளையும் இங்கு வந்து சேரவிருக்கின்றது. (உ)


துரிதமீட்டல் - வினா விடை வகுப்பு

LOGIC-A/L.2001

எஸ். எஸ். மனோகரன்

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க

பிரிவு II ஆரம்பம்: 03-02-2001

நேரம்: பகல் 1 மணி

| அத்தியாயம் | காலப்பகுதி |
|---|---|
| ✪ குறியீட்டு அளவையியல்<br>✪ விஞ்ஞானிகள்-கொள்கைகள் | மாசி, பங்குனி |
| ✪ விஞ்ஞானமுறை<br>✪ வென் படம் | சித்திரை,வைகாசி |
| ✪ உடன் அனுமானம்<br>✪ ஊடக அனுமானம் | ஆனி |
| ✪ சிறு குறிப்புகள் (பகுதி I)<br>✪ போலிகள் | ஆடி |

(83577)

BEACON யாழ்.நகர் (வெலிங்டன் சந்தி)



யாழ். மாணவர்களின் நன்மை கருதி....

விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்

SCIENCE & TECHNOLOGY

GCE O/L 2001, GR. 10, GR. 9

யாழ்,கொழும்பு நகர பல முன்னனி கல்வி நிலையங்களில் கற்பித்த யாழ். முன்னனி ஆசிரியர்

மீண்டும் யாழ். நகரில்!!

குமரன்

ஆரம்பம் 03-02-2001

PERSONAL CLASSES

☐ 20 மாணவர்களிற்கு மாத்திரம்

☐ மாணவரின் வசதிக்கேற்ப வகுப்புக்கள்

தொடர்புகளுக்கு:- T.P:- 021.3481 54/1, நக்கா றோட், யாழ்ப்பாணம்.

("பொஸ்கோ பாடசாலை" அருகில் R.G. ஸ்ரோஸ் இற்குப் பின்னால்)

GROUP CLASSES

☐ 5 மாணவர்களைக் கொண்டது.

☐ உங்கள் வீடுகளில் அல்லது

பின்வரும் இடங்களில் நடைபெறும்

✪ 54,இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். ✪ 54/1 ,நக்கா றோட், யாழ்ப்பாணம். (BOSCO பாடசாலை அருகில்) ✪ யாழ் பிரதான வீதி, பஸ்தியன் சந்தி.

நல்லூர், கந்தர்மடம் ஆகிய இடங்களில் நடைபெறும் வகுப்புக்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் - மாணவர்கள் பதிவுகளை அந்தந்த இடங்களில் மேற்கொள்ளலாம்.

கல்வி நிலைய வகுப்புக்கள்

RADIANT INSTITUTE - JAFFNA [05-02-2001 ஆரம்பம்]

✪ வடமராட்சி ✪ மானிப்பாய் ✪ கோண்டாவில் ✪ சித்தன்கேணி ✪ கோப்பாய் ✪ இணுவில் ✪ சுன்னாகம் ✪ உரும்பிராய் ✪ உடுவில் ஆகிய இடங்களில் ஏதாவது 5 இடங்களில் உள்ள நிறுவனங்களில் கற்பிக்க உள்ளதால் விரும்பும் கல்வி நிலையங்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகள் யாவற்றிற்கும் 54/1, நக்கா றோட், யாழ்ப்பாணம் T.P:-021-3481

("பொஸ்கோ" பாடசாலை அருகில் R.G. ஸ்ரோர்ஸ் இற்குப் பின்னால்)

NOTE:- 10-02-2K+1 இற்கு முன் பதிவுகள் யாவும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(சி/15072)



சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கான

அவசர கலந்துரையாடல்

காலம் :- நாளை (02.02.2001) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணி

இடம் :- மாணவர் பொது அறை- யாழ்.பல்கலைகழகம்

அனைத்து 14ஆம் (3ஆம் வருட) அணி மாணவர்களும் கலந்துகொள்க.

-14ஆம் அணி மாணவர்கள்.

(83583)



விற்பனையாகிறது

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கமைய வடிவமைக்கப்பட்ட

தரம் 10, தரம்11 வகுப்புக்களுக்கான

✪ வணிகக்கல்வியும் கணக்கீடும்

அ.சிவநேசராஜா

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான

✪ அடிப்படை இலத்திரனியல்

பூபாலசிங்கம் புத்தகசாலை

இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/15097)


## மரண அறிவித்தல்

### முருகேசு கனகரத்தினம்

**(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)**

புலோலி கிழக்கு திகிரியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி, நல்லூர், கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடங்களாவும் கொண்ட மு.கனகரத்தினம் 30-01-2001 செவ்வாய் கொழும்பில் காலமானார்.

அன்னார் நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட மீனாட்சியின் அன்புக் கணவரும், இராசேந்திரம்(இளைப்பாறிய படவரைஞர்- நில அளவைத் திணைக்களம்) இராஜேஸ்வரி(U.K), இராசரத்தினம்(நீதிமன்றம் - வவுனியா), இராஜகோபால் (விலைமதிப்பாளர்- கொழும்பு மாநகரசபை), இராஜலட்சுமி(U.K), இராமச்சந்திரன (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), இரத்தினேஸ்வரி(கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியதேவி, இந்திரன்(U.K), வாசுகி,சிவகுமாரி, K.சிவசுப்பிரமணியம் (U.K),மனோ,Dr.சுதர்சன் (தேசிய வைத்தியசாலை- கொழும்பு), ஆகியோரின் மாமனாரும், தனுர்ஷன், ரமணன், ஹரிநிவிர்த்திநாத், சேந்தன், கண்ணன், சர்சினி, வானுசிந்தி, ரூபி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், ஆழ்வாப்பிள்ளை (புலோலி) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கல்கிசை மயானத்தில் நேற்று (31-01-2001) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு முகவரி:-
*48A 1/1 ஐ.பி.சி. றோட்*
*வெள்ளவத்தை.*
*T.P.NO.507673*

*33, செட்டித்தெரு லேன்,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
க.குமாரசுவாமி
(மைத்துனர்)

(83609)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01. 02. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.